பக்கங்கள்: 16

காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 புரட்டாதி 25 ஞாயிற்றுக்கிழமை 13.10.2019 கதிர் 342

இனி இது ரகசியம் அல்ல!

எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல் முடிவு மொட்டுக்குப் பெரு வெற்றி என்று அத்தரப்புக் கொண்டாடுகின்றது. ஆனால் அத்தேர்தல் முடிவை ஒரு பின்னடைவாக சஜித் தரப்பு கணக்கெடுக்கவில்லை என்றும் கூறப்படுகின்றது.

எல்பிட்டிய பக்கம் 02 »

# சிவாஜிலிங்கம் களமிறங்கியமைக்கு ரெலோவுக்குள் வலுக்கின்றது ஆதரவு

## நேற்றுக் கூடிய மாவட்டக் குழு அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், ஒக். 13

முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினரும் ரெலோவின் தவிசாளருமான எம்.கே. சிவாஜிலிங்கம் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கியமைக்கு ஆதரவாக ரெலோ இயக்கத்தின் யாழ். மாவட்டக் குழுக் கூட்டத்தில் நேற்றுக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

அத்துடன் சிவாஜிலிங்கத்தின் இந்த முடிவுக்கு எதிராக இன்று வவுனியாவில் கூடும் ரெலோவின் தலைமைக் குழு எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கக்கூடாது என்றும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

பக்கம் 03 »



## தமிழ்க் கட்சிகள் இன்று பொது இணக்கப்பாடு?

கொழும்பு, ஒக். 13

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பின் நிலைப்பாட்டைத் தமிழ்த் தேசியத்தை முன்னிலைப்படுத்தி செயற்படும் அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளும் கூட்டாக இணைந்து முன்வைப் பக்கம் 03 »

## விஞ்ஞாபனங்கள் வெளியாகிய பின்னர் மக்களுடன் பேசி தேர்தல் குறித்து முடிவு

### மாவை சேனாதிராசா எம்.பி. தெரிவிப்பு

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 13

வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்துடன்,மக்களுடனான பல்வேறுகலந்துரையாடல்களில் எடுக்கப்படும் தீர்மானங்களின் அடிப்படையிலும் ஜனாதிபதி வேட்பாளரைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவு செய்யும் என நாடாளு பக்கம் 03 »

## கட்சிக் கொள்கைகளை மீறாமல் பெரமுனவுடன் இணைந்தோம்!

### சந்திரிகாவுக்கு தயாசிறி கடிதம்

கொழும்பு, ஒக். 13

கட்சிஎடுத்ததீர்மானத்தின் அடிப்படையிலும் நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலையை கருத்திற்கொண்டும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுடன்சுதந்திரக்கட்சிமுடிவெடுத்தது. பக்கம் 03 »

## பல்கலை மாணவர் முயற்சியை பாராட்டுகின்றார் மாவை எம்.பி.

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 13

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் இணைந்து ஒரு மித்த நிலைப்பாட்டை எடுக்க வேண்டுமென யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் எடுத்துள்ள நடவடிக்கைநல்லதொருமுயற்சி எனத் பக்கம் 03 »

## மதுபோதையில் கிணற்றில் வீழ்ந்து குடும்பஸ்தர் சாவு!

யாழ்ப்பாணம், ஒக். 13

மல்லாகம் பகுதியில் உள்ள கிணற்றில் இருந்து, ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர், மல்லாகம், குழமங்காலை பகுதியைச் சேர்ந்த நான்கு பக்கம் 03 »

## கிளிநொச்சி வீடொன்றினுள் பெருந்தொகை ஆயுதங்கள்!



கிளிநொச்சி, ஒக். 13

கிளிநொச்சி, அம்பாள்குளம் பகுதியில் பெருமளவு ஆயுதங்கள், இராணுவத் தளபாடங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பக்கம் 03 »

## 3 துப்பாக்கிகளுடன் ஒருவர் மல்லாவியில் கைதானார்!

முல்லைத்தீவு, ஒக். 13

முல்லைத்தீவு - மல்லாவி, பொன்னகர் பிரதேசத்தில் 03 துப்பாக்கிகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மல்லாவிப் பொலிஸ் அதிகாரிகளுக்குக்கிடைக்கப் பெற்ற தகவல் ஒன்றுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்தச் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்எனப்பொலிஸ் ஊடக பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சந்தேகநபரிடம் இருந்து உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பக்கம் 03 »

## கனகராயன்குளம் விபத்தில் நேற்று ஒருவர் உயிரிழப்பு!

### மோதிய வாகனம் தப்பியோட்டம்

வவுனியா, ஒக். 13

வவுனியா, கனகராயன்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். விபத்தை ஏற்படுத்திய வாகனம் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று மாலை இந்த விபத்து இடம்பெற்றது.

வவுனியா, கனகராயன் பக்கம் 03 »

## சஜித்தை ஆதரிக்க தயாராகும் ஐக்கிய இடதுசாரி முன்னணி!

கொழும்பு, ஒக். 13

ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான, ஐக்கிய இடதுசாரி முன்னணி, ஜே.வி.பி. வேட்பாளர் அனுரகுமார திசநாயக்கவுக்கு அளிக்க முடிவு செய்த ஆதரவு குறித்து மறுபரிசீலனை செய்து வருவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

'திசைகாட்டி' சின்னத்தின் கீழ் போட்டியிடும் அனுரகுமார திசநாயக்கவுக்கு ஆதரவளிக்கவும், இரண்டாவது விருப்பு வாக்கை, அன்னம் சின்னத்தில் போட்டியிடும் சஜித் பிரேமதாஸவுக்கு அளிக்கவும், கோருவதென ஐக்கிய இடதுசாரி முன்னணி தீர்மானித்திருந்தது.

எனினும், கட்சியின் ஆதரவாளர்கள் பலரும் ஒரு உறுதியான முடிவை எடுக்கவேண்டும் என விடுத்த கோரிக்கைக்கு அமைய தமது முடிவு குறித்து ஐக்கிய இடதுசாரி முன்னணி மறுபரிசீலனை செய்து வருகிறது.

சஜித் பக்கம் 03 »

## நாடு திரும்பினார் கோட்டா

கொழும்பு, ஒக். 13

மருத்துவப்பரிசோதனைக்கு சிங்கப்பூர் சென்றிருந்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய பக்கம் 03 »

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

# புத்தளத்தில் இயங்கிவரும் மன்னார் வலயப் பாடசாலைகளை வடமேல் மாகாண ஆளுநரிடம் கையளித்தார் சுரேன் ராகவன்

யாழ்ப்பாணம், ஒக். 13

வடக்கு மாகாணம் மன்னார் வலயத்திற்குட்பட்ட தற்போது புத்தளம் மாவட்டத்தில் இயங்கி வரும் ஆறு பாடசாலைகளையும் வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன்ராகவன், வடமேல்மாகாண ஆளுநர் பேசல ஜயரத்ன பண்டாரவிடம் கையளித்தார்.

வடக்கு மாகாண சபைக்கு ஒதுக்கப்படும் நிதியில் புத்தளம் வலயத்தில் இயங்கும் பாடசாலை





களில்கற்பிக்கும்ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கப்படுவதாக வடக்கு மாகாண சபையில் 2017ஆம் ஆண்டு சர்ச்சையை ஏற்படுத்திய இந்த விடயத்துக்கு வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

இதுதொடர்பில்வடக்குமாகாண ஆளுநரின்ஊடகப்பிரிவுஅனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்த நிகழ்வு ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. மன்னார் வலயத்தை சேர்ந்த மன் /புத் /றிஸ்வான் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை ,மன் /புத் /ஆப்தீன் முஸ்லிம் கலவன் பாடசாலை, மன் /புத் / அன்சாரி முஸ்லிம் கலவன் பாடசாலை , மன் /புத் / ஹஸ்பன் முஸ்லிம் கலவன் பாடசாலை, மன்/ புத் / அயூப் முஸ்லிம் கலவன் பாடசாலை, மன்/புத்/ரிாத் பதியுதீன் மகாவித்தியாலயம் ஆகிய ஆறு பாடசாலைகளும் தற்போது புத்தளத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றன.

இப்பாடசாலைகளில் மொத்தமாக 2 ஆயிரத்து 386 மாணவர்களும் 167 ஆசிரியர்களும் தற்போது கடமைபுரிந்துவருகின்றனர். 1990 ஆம் ஆண்டிற்கு பிற்பட்ட காலப்பகுதியில் இருந்து இப்பாடசாலைகள் புத்தளத்தில் இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்து.

அத்துடன் இப்பாடசாலைகளின் அபிவிருத்தி மற்றும் ஆசிரியர்களுக்கானகொடுப்பனவுகள் என்பன வடமாகாணத்தின் நிதியிலிருந்தே இதுவரை ஒதுக்கப்பட்டன. இனிவரும்காலங்களில் இவற்றை வடமேல்மாகாணத்தின்கீழ்கொண்டுவரும்பொருட்டு இந்த கலந்துரையாடல் இரண்டு மாகாணங்களினது ஆளுநர்கள் தலைமையில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலை தொடர்ந்து வடமாகாணத்தை சேர்ந்த குறித்த ஆறு பாடசாலைகளையும் மாகாண ஆளுநர் வடமேல்மாகாண ஆளுநரிடம் கையளித்தார்.

இதன்போதுவடமேல்மாகாண ஆளுநர் தனது அதிகாரிகளுக்கு குறித்தபாடசாலைகளைவடமேல் மாகாணத்தின் கீழ் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணிப்புரை வழங்கினார்.

இந்த கலந்துரையாடலின் போது வடக்கு மற்றும் வடமேல் மாகாண ஆளுநர்களின் செயலாளர்கள், வடமாகாண மற்றும் வடமேல் மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், கல்வி அமைச்சின் செயலாளர்கள், திட்டமிடல் பிரதிப்பிரதம செயலாளர், நிதி பிரதிப்பிரதம செயலாளர்கள், வடமாகாண கல்வி பணிப்பாளர் , மன்னார் வலய கல்வி பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*காலங் காலமாக நீலக்கட்சியின் கோட்டை. நீலக்கட்சியின்கைதான் எப்போதும் அங்கு ஓங்கியிருந்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், பொதுஜன பெரமுனவும் சேர்ந்து அங்கு எழுபது முதல் எழுபத்தியைந்து வீத வாக்குகளை எடுக்கும் என்றுதான் பொதுவாகக் கணக்கிட்டோம். அறுபத்தி ஒன்பது வீத் வாக்குகளை அவை பெற்றுள்ளன. ஆகவே இது எதிர்பார்த்த முடிவுதான்!"* – என்றன ஐ.தே.க. சார்பு வட்டாரங்கள்.

*"தாம் கிராமத்தவன், நகரத்தவன் அல்லன் என்ற பாணிப் பேச்சை முன்வைத்துத்தான் பிரசாரத்தை முன்னெடுக்கின்றார் சஜித். அதனால் கிராமியப் பிரதேசமான எல்பிட்டியவில் கணிசமான வாக்குகள் ஐ.தே.க. தரப்புக்குக் கிடைக்கும் என அத்தரப்பு எதிர்பார்த்தது. மேலும் சாதி விவகாரம், எல்பிட்டியவில் தமக்குச் சாதகமானது எனக் கணக்கிட்டார் சஜித். ஒன்றுமே கடைசியில் சரிவரவில்லை. சஜித்துக்கு இந்தத் தேர்தல் ஒர. பெரும் பின்னடைவு. இதுதான் ஒட்டுமொத்த தேன்னிலங்கை வாக்களிப்பின் பிரதிபலிப்பாக இருக்கப் போகின்றது. வடக்கு, கிழக்கில் சஜித்துக்கு எத்தகைய சாதகமான நிலைமை வந்தாலும், தென்னிலங்கை முடிவுகள் அது அனைத்தையும் கூட்டி அள்ளித் தாண்டி, வசதியான வெற்றி ஒன்றைக் கோட்டாவுக்குத் தரும்"* – என்று நம்பிக்கை வெளியிட்டார் கோட்டா தரப்புக்கு ஆதரவு காட்டும் தென்னிலங்கை ஊடகவியலாளர் ஒருவர்.

எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல் முடிவு ஒரு தரப்புக்கு கணிசமான வெற்றியைத் தந்திருக்கின்ற போதிலும் மற்றைய தரப்புக்கு அது அதிர்ச்சி தரும் தோல்வியாக இல்லை என்பது தான் நிலைமை.

★ ★ ★

நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்புகள் பொதுவான நிலைப்பாடு ஒன்றை எடுக்க வேண்டும் என்பதற்காக யாழ்.பல்கலைக்கழகமாணவர்ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இணைந்த பல்கலைக்கழக மாணவர்கள் ஒழுங்கு செய்துள்ள தொடர் கூட்டத்தின் நான்காவது அமர்வுகள் இன்று காலை நடைபெறவிருக்கின்றன.

இந்தக் கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் அதன் தலைவர் மாவை சேனாதிராசாவுடன், கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனும் பங்குபற்றுகின்றார்.

கூட்டமைப்பு சார்பில் தேசிய கட்சிகளின் வேட்பாளர்களுடன் நேரடியாக ஊடாட்டத்தை மேற்கொண்டு வரும் சுமந்திரனே இன்றைய கூட்டத்தில் நேரடியாகப் பங்குபற்றுகின்றமையால், இன்றைய கூட்டத்தில் தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படலாம் என எதிர்பார்க்கலாம்.

எது, எப்படி என்றாலும் யாழ். பல்லைக்கழக மாணவர் ஒன்றியத்தின் நிர்வாகிகளுக்கும், சுமந்திரனுக்கும் இடையில் ஒரு நம்பிக்கையுடன் கூடிய புரிந்துணர்வு இருப்பதாக வேறு உதவியாளர்கள் சிலர் குறிப்பிட்டனர்.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய அலுவலகத்தில் இருந்த சில சித்திரங்கள், படங்கள் போன்றவற்றை ஒட்டி மாணவர் ஒன்றியத் தலைவரும், செயலாளரும், கைது செய்யப்பட்டுப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்ட போது, சட்டமா அதிபருடன் அது குறித்து உரையாடி, அவர்களைப் பிணையில்விடுவிக்கநடவடிக்கை எடுத்தவர் சுமந்திரன்.

இந்த வழக்கிலிருந்து மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளை நிரந்தரமாக விடுவிக்கும் நடவடிக்கையைத் தாம் விரைந்து எடுத்துத் தருவார் என சுமந்திரன் மாணவர் தரப்புக்கு உறுதியளித்திருந்தார்.

ஆனால், சட்டமா அதிபரின் இணக்கமின்றி மாணவர்களை இந்த வழக்கில் பிணையில் விடுவிக்கும் அதிகாரம் தமக்கு இல்லை என முதலில் யாழ். நீதிவான் அளித்த உத்தரவுக்கு எதிராக, மறுசீராய்வு மனு ஒன்று மேல் நீதிமன்றத்தில் வேறு சில சட்டத்தரணிகளினால் தாகல் செய்யப்பட்டிருந்தது.

அந்த மறுசீராய்வு மனு நிலுவையில் இருக்கின்றமையால் இந்த மூல வழக்கை முடிவுக்குக் கொண்டு வந்து மாணவர்களைவிடுவிக்கும்நடவடிக்கையை எடுக்க முடியாது என சட்டமா அதிபர் கைவிரித்து விட்டார் எனக் கூறப்படுகின்றது.

மேற்படி பயங்கரவாதத் தடுப்புச் சட்ட விதியின் கீழ், சட்டமா அதிபர் தரப்பின் இணக்கமின்றி சந்தேகநபருக்குப்பிணைகொடுக்கும் அதிகாரம் நீதிவானுக்கு இல்லை என்றும் –

இவ்விடயத்தில் நீதிவானின் முதல் உத்தரவு சரியானது என்றும் –

அதனால்தான் சட்டமா அதிபரின் இணக்கத்துடன் மாணவர்கள் இருவரையும் பிணையில் விடுவிப்பதற்குப் பின்னர் தாம் நடவடிக்கை எடுத்து அதனை நீதிமன்றம் மூலம் செய்வித்தார் என்றும் –

ஆகவே, வழக்கிலிருந்து இரு மாணவர்களையும் முற்றாக விடுவிப்பதற்கு முயற்சி எடுப்பதாயின், மேல் நீதிமன்றத்தில் வேறு சட்டத்தரணிகள் மூலம் தொடர்புபட்ட – யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் பிணை மறுப்புத் தொடர்பில் முதலில் விடுக்கப்பட்ட உத்தரவுக்கு எதிரான – சீராய்வு மனுவை நிரந்தரமாக விலக்கிக் கொண்டு வாருங்கள் என்றும் –

மேற்படி இரு மாணவர்களின் தரப்புகளுக்கும் சுமந்திரன் சார்பிலான சட்டத்தரணிகள் அறிவுறுத்தியுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

அதனை ஏற்று, ஒருவாறு மற்றைய சட்டத்தரணிகள் தாக்கல் செய்த சீரமைப்பு மனுவை மாணவர்கள் தரப்பு விலக்கிக் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது.

அடுத்து வரும் வாரங்களில் மாணவ தலைவர்கள் இருவருக்கும் எதிரான மேற்படி மூலவழக்கை முழுமையாக விலக்கிக் கொள்வதற்கான முயற்சியை சட்டமா அதிபருடன் கலந்துரையாடி சுமந்திரன் மேற்கொள்வார் எனக் கூறப்படுகின்றது.

இந்தப் பின்புலத்திலேயே மாணவ தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் சுமந்திரனும் இன்று கலந்து கொள்கின்றார்.

★ ★ ★

நேற்று தமிழ் இணையத் தளங்கள் சிலவற்றில் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் பிரதிநிதிகளான துளசி, கதிர், வேந்தன், கவியரசன் ஆகியோர் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவையும், கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவையும் மிகவும் இரகசியமான இடம் ஒன்றில் – மிக இரகசியமான முறையில் – கடந்த வாரம் சந்தித்துப் பேசியுள்ளனர் என்று பரபரப்புச் செய்தி, மேற்படி இரண்டு தலைவர்களையும் ஜனநாயகப் போராளிகள் கட்சிப் பிரதிநிதிகள் சந்திக்கும் படங்களுடன் வெளியாகியது.

உள்ளே புகுந்து விசாரித்தால் இது புதிய மொந்தையில் பழையகள்' என்ற மாதிரியான செய்தி என்பது தெரியவந்தது.

ஜனநாயகக் கட்சியின் பிரதிநிதிகள்சுமார்மூன்றுமாதங்களுக்கு முன்னர் கொழும்பு வந்தமை குறித்தும் –

அவர்களை இ.தொ.கா. தலைவர் தொண்டமான் நாடாளுமன்றுக்குக் கூட்டி வந்து நாடாளுமன்ற கன்ரீனில்' மதிய விருந்து அளித்தமையுடன் மஹிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்புக்கும் ஏற்பாடு செய்து கொடுத்திருந்தார் என்றும் –

இப்பத்தியில் நான் விலாவாரியாகக் குறிப்பிட்டிருந்தமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

அப்போது நடந்த சந்தப்பின் படங்கள் இப்போது பிரசுரமாகியுள்ளன.

கூட்டமைப்பில் மேற்படி ஜனநாயகப் போராளிகள் கட்சியினரை இழுத்துப் பிடித்துக் கட்டி வைக்கும் வேலையைச் செய்து கொண்டிருக்கும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானத்திடமாவது இப்படித் தாம் கொழும்புக்குச் செல்லும் செய்தியையும் மஹிந்த தரப்பைச் சந்திக்கவிருப்பது பற்றிய தகவலையும் ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் முற்கூட்டியே கூறியிருக்கலாம் என்றும் நான் அப்போது குறிப்பிட்டிருந்தேன்.

அதனாலோ, என்னவோ அந்தத் தகவல் இப்பத்தியில் பிரசுரமாகி சில நாள்களின் பின்னர் அவர்கள் சி.வீ.கே.சிவஞானம் முன்னால் முன்னிலையாகி, நடந்த விடயங்கள், சந்திப்புக்கள் குறித்து ஓர் ஒப்புதல் வாக்குமூலம் பாணியிலான கருத்து வெளிப்பாட்டை மேற்கொண்டனர் என அறிய வந்தது.

மஹிந்தரைச் சந்தித்தோம், இன்னது கூறினார், சிகிச்சைக்கக வெளிநாடு சென்றிருக்கும் கோட்டாபய நாடு திரும்பியதும் அவரையும் சந்திக்கும் படி அவர் கேட்டுக் கொண்டார், அதன் பிரகாரம் அவர் நாடு திரும்பியதும் அவரையும் சந்தித்தோம் என்றெல்லாம் ஒப்புதல் தகவல்களை அவர்கள் தெரிவித்தனர்.

இவை எல்லாம், ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படுவதற்கும், வேட்பாளராக கோட்டாபய அறிவிக்கப்படுவதற்கும் முன்னர் நடந்த சங்கதிகள்.

அந்த விடயத்தைத்தான் இப்போது புதிய மொந்தையில், புது விவகாரமாகச் சோடிக்க முற்பட்டிருக்கின்றன சில இணையத் தளங்கள்....!

- மின்னல் -

# 375 முறைப்பாடுகள் இதுவரையில் பதிவு

கொழும்பு, ஒக். 13

ஜனாதிபதி தேர்தலுடன் தொடர்புடைய 375 முறைப்பாடுகள் இதுவரை பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த 8 ஆம் திகதி தொடக்கம் நேற்று முன் தினம் வரை ஜனாதிபதி தேர்தல் வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்துள்ள நிலையில், தேர்தல் விதி மீறல்கள் தொடர்பாக 360 முறைப்பாடுகளும், வன்முறை சம்பவங்கள் தொடர்பாக 09 முறைப்பாடுகளும் மற்றும் வேறு 6 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நேற்று முன் தினம் மாலை 4.30 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் 106 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி தேர்தல் விதி மீறல்கள் தொடர்பாக 98 முறைப்பாடுகளும், வன்முறை சம்பவங்கள் தொடர்பாக 4 முறைப்பாடுகளும் மற்றும் வேறு 4 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## சிவாஜிலிங்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் ரெலோவின் தலைமைக் குழு இந்த விவகாரத்தை விவாதிப்பதற்காகக் கூடவுள்ள நிலையில் ரெலோவின் யாழ். மாவட்டக் குழு சிவாஜிலிங்கத்துக்கு ஆதரவாக நேற்றுக் கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றது.

நேற்று நடைபெற்ற ரெலோ யாழ். மாவட்டக் குழுவின் கூட்டத்தில் உரையாற்றிய 20 உறுப்பினர்களில், 2 பேரைத் தவிர ஏனைய அனைவரும் சிவாஜிலிங்கத்துக்கு ஆதரவாகக் கருத்துக்களை முன்வைத்தனர் எனத் தெரியவருகிறது. வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் மற்றும் ஓர் உள்ளூராட்சி சபையின் தலைவர் ஆகிய இருவரைத்தவிர அங்கு உரையாற்றிய அனைத்து உறுப்பினர்களும், சிவாஜிலிங்கம் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டால் விபரீதமான விளைவுகளைக் கட்சி சந்திக்க வேண்டி இருக்கும் என எச்சரித்தனர்.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட சிவாஜிலிங்கம், கடைசியாக உரையாற்றும்போது உறுப்பினர்கள் எழுப்பிய சில விடயங்களுக்கு விளக்கமளித்தார்.

முடிவில் அங்கு சமுகமளித்திருந்த கட்சியின் செயலாளர் நாயகம் சட்டத்தரணி என். சிறிகாந்தா உரையாற்றும்போது, கட்சியின் கட்டுப்பாட்டுக்கு மாறாக சிவாஜிலிங்கம் சாதாரண முடிவெடுத்து ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கியிருப்பது தொடர்பில், அவரிடமிருந்து விளக்கம் கோருகின்ற ஒரே ஒரு நடவடிக்கை மாத்திரமே இன்று வவுனியாவில் கூடும் ரெலோ தலைமைக் குழுக் கூட்டத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட முடியும் என்றும் தெரிவித்தார்.

சிவாஜிலிங்கத்தைச் சிலுவையில் அறையச் சிலர் துடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும், அவர்கள் தங்கள் சொந்த நிகழ்ச்சி நிரலில் இயங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்றும், சிவாஜிலிங்கத்தையும் அவரோடு இணைந்திருக்கக் கூடியவர்களையும் கட்சியை விட்டு வெளியேற்றப்படும் சூழலை ஏற்படுத்தினால் தங்களது அரசியல் எதிர்காலம் பிரகாசமாக இருக்கும் என்று அவர்கள் கணக்குப் போடுகிறார்கள் என்றும் சிறிகாந்தா அங்கு குற்றம் சாட்டினார்.

வடமாகாண சபைத் தேர்தல் முடிவடைந்ததை அடுத்து கட்சியின் முடிவுக்கு விரோதமாக முதலமைச்சர் விக்னேஸ்வரனால் அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட டெனீஸ்வரன் தொடர்பில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

அதன் பின்னர் ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட நிலையில் டெனீஸ்வரன் நீக்கப்பட்டு அவரது இடத்துக்கு யாரை நியமிப்பது என்ற விவகாரம் வந்த போது, கட்சி நியமித்த உறுப்பினர் விந்தன் கனகரத்தினத்துக்குப் பதிலாக முதலமைச்சரின் முடிவின் பிரகாரம் ஓடோடிச் சென்று பதவி ஏற்றுக்கொண்ட மருத்துவர் குணசீலனுக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் அவர் கேட்டார்.

அதுமாத்திரமன்றி வரவு செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களிக்கவேண்டும் எனக் கட்சியின் எம்.பிக்களுக்கு பொதுக் குழு திட்டவட்டமான உத்தரவை விடுத்திருந்த நிலையில், அதனை மீறி வாக்களித்த அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரனுக்கு எதிரா ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கு ஏன் காலதாமதம் ஏற்பட்டது என்றும் சிறிகாந்தா கேள்வி எழுப்பினார்.

இப்போது சிலர் சிவாஜிலிங்கத்தைச் சிலுவையில் அறையத் துடிக்கிறார்கள் என்றும் அதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்றும் அவர் திட்டவட்டமாகக் கூறினார்.

கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் இந்த விவகாரம் தொடர்பில் நிதானமான கருத்துக்களை வெளியிட்ட போதும் வேறு சிலர் குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் இருந்து அநாவசியமான முறையில் – ஆத்திரமூட்டும் வகையில் சில கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள் என்பதனையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இவற்றுக்கெல்லாம் இடமளிக்கப்படமுடியாது. சிலர் நினைக்கிறார்கள் செல்வமும் சிறிகாந்தாவும் முரண்பட்டிருக்கிறார்கள் என்று. அப்படி அல்ல. இருவருமே இரட்டைக் குழல் துப்பாக்கிபோல கட்சிக்காகச் செயற்பட்டு வந்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டிய சிறிகாந்தா, செல்வம் அடைக்கலநாதன் இந்த விடயத்தில் கட்சி நிதானமான முடிவை எடுப்பதற்கு தனது பங்களிப்பை வழங்குவார் என்பதிலே தனக்கு நம்பிக்கை உள்ளதாகத் தெரிவித்தார்.

இன்று வவுனியாவில் நடைபெறும் கூட்டத்தில் சிவாஜிலிங்கத்துக்கு எதிராக எடுக்கப்படக் கூடிய ஒரே ஒரு தீர்மானம் அவரிடமிருந்து விளக்கம் கோருவதற்கான கடிதம் ஒன்றை அனுப்புவதாக மாத்திரமே இருக்கமுடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த விடயத்தில் ரெலோவின் யாழ். மாவட்டக்குழு சிவாஜிலிங்கத்துக்கு ஏகோபித்த ஆதரவைத் தெரிவித்திருப்பதை இன்றைய கூட்டத்தில் சமர்ப்பிக்கவேண்டிய கடமை யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த தலைமைக்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இன்றைய கூட்டத்தில் சிவாஜிலிங்கத்துக்கு எதிராகக் கடுமையான தீர்மானம் கொண்டுவரப்படுமாக இருந்தால் கட்சிக்குள் புயலைக் கிளப்பும் என்ற கருத்து ரெலோவின் யாழ். மாவட்டக் குழுக் கூட்டத்தில் பிரதிபலித்ததை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. (ஐ)

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலையில் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஒருவரின் வீட்டிலிருந்தே இந்த ஆயுதங்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மீட்பு நடவடிக்கையை விசேட அதிரடிப் படையினரும், பொலிஸாரும் இணைந்து மேற்கொண்டுள்ளனர்.

ரி-56 ரக துப்பாக்கி-1, பிஸ்டல்கள் -3, கைக்குண்டுகள் -5, ரி-56 ரக துப்பாக்கி ரவைகள் 150, பிஸ்டல் ரவைகள் 45, மடிக்கணினி ஒன்று, தொலைபேசிகள் -4, எம்.ரி.எம்.ரி ரக துப்பாக்கி ரவைகள் 7, டேட்டனேற்றர்கள் 45, ஜி.பி.எஸ்-1, டிஜிட்டல் கமெரா, சிறிய ரிமோட் வகைகள், குண்டுகளை வெடிக்க வைக்கப் பயன்படுத்தப்படும் வயர்கள், வெடிப்புக் கருவிகள் உட்பட இன்னும் சில உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பாக தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஐ)

## நாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷ நேற்று நாடு திரும்பினார்.

எல்பிட்டிய தேர்தல் வெற்றிக்காகப் பல்வேறு அரசியல் பிரமுகர்கள் கோட்டபாயவுக்கு வாழ்த்து தெரிவித்து வரும் அதேசமயம் ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த பிரமுகரான அமைச்சர் ஒருவரும் தொலைபேசியில் தொடர்புகொண்டு கோட்டாவை வாழ்த்தினார் என அறிய முடிந்தது.

இன்று முதல் தனது பிரசாரப் பணிகளை நாடளாவிய ரீதியில் அவர் ஆரம்பிப்பாரெனக் கட்சித் தகவல்கள் தெரிவித்தன. (ஐ)

## பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்த்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா, அந்த முயற்சிக்குத் தனது வாழ்த்துக்களையும் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா விடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசியக் கட்சிகளை இணைத்து தமிழர் தரப்பு ஒருமித்த நிலைப்பாட்டை எடுக்கவேண்டுமெனப் பல்கலைக்கழக மாணவர்கள் எடுத்துள்ள முயற்சிக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். அந்த முயற்சியில் நாங்களும் உடன்பட்டு எல்லோரும் இணைந்து ஒரு நிலைப்பாட்டை எடுப்பதற்கான பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன.

குறிப்பாக தமிழர் தரப்பாக அனைவரும் ஒருமித்து தீர்மானத்தை எடுத்து எங்களது நிலைப்பாட்டை அறிவிப்போம். அதன் பின்னர் இந்த நிலைப்பாடுகளை வைத்துக் கொண்டு தேர்தலில் முடிவுகளை எடுக்கலாம். இவ்வாறு எடுக்கப்படும் தீர்மானத் திற்கமைய நாங்கள் எல்லோரும் பூரணமான ஒத்துழைப்பை வழங்கி இனத்தின் விடுதலைக்காக ஒன்றுபட்டு செயற்படுவோம்.

இவ்வாறு இனத்தின் விடுதலைக்காக ஒன்றுபட்டுச் செயற்படுவது இந்தத் தேர்தலில் மட்டுமல்லாது தேர்தலுக்குப் பின்னரும் முன்னெடுக்கப்படவேண்டும். அதாவது தேர்தலுக்குப் பின்னரும் தமிழ் மக்களின் இன விடுதலைக்காக நாங்கள் அனைவரும் சேர்ந்து ஒரு கூட்டமைப்பாக அடுத்த கட்டம் குறித்து தீர்மானிக்க வேண்டும் – என்றார். (ஐ-07)

## கட்சிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

முன்னதாக சந்திரிகா அனுப்பிய கடிதம் ஒன்றுக்கு பதில் அளிக்கும் வகையிலேயே இந்தக் கடிதத்தை தயாசிறி அனுப்பியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர முடியாது என்பதால் சில கொள்கைகளை முன்வைத்து நாங்கள் இணைந்தோம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தனித்துவம் அப்படியே இருக்கிறது. அதில் விட்டுக்கொடுப்பில்லை என்று அவர் தனது கடிதத்தில் கூறியுள்ளார். (ஐ)

# நாட்டு மக்களின் மகிழ்ச்சிகரமான வாழ்க்கையே எனது எதிர்பார்ப்பு

## சஜித் பிரேமதாஸ கூறுகிறார்

ஜனாதிபதியான பின்னர் நாட்டில் அனைத்து மக்களும் மகிழ்ச்சியாகவும், திருப்திகரமாகவும் வாழ்கின்றார்களா என்பது குறித்து அடிக்கடி மதிப்பீடுகளை மேற்கொள்ளவுள்ளதாக புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் இந்த கருத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

வேறு விடயங்கள் பற்றி கரிசனை காட்டுவதை விட பொது மக்களுக்கு மகிழ்ச்சியான வாழ்க்கையை உருவாக்கிக் கொடுப்பதே பெறுமதியான விடயமாகும்.

அனைத்து குடிமக்களையும் ஒன்றிணைத்து ஒவ்வொரு குடும்பத்தினதும் பொருளாதார முன்னேற்றம், சமூக முன்னேற்றம் மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ்கிறார்களா என்று மதிப்பீடு செய்வதே எனது மிகப் பெரிய எதிர்பார்ப்பாகும்.

அதன்படி, மக்கள் மத்தியில் பிரச்சினைகள் இருக்குமாயின் அவற்றுக்கு துரிதமான தீர்வுகளை வழங்கி, தாய் நாட்டினுள் மக்களை பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். ஒருநாளும் பொதுமக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய தீர்மானங்களை மேற்கொள்ளப் போவதில்லை.

பொதுமக்களின் காலடிக்கு வரக்கூடிய ஒருவரையே தெரிவு செய்து நாட்டின் எதிர்காலத்தை ஒப்படைக்க வேண்டும். எனவே எனக்கு அந்த பொறுப்புகளையும், கடமைகளையும் நிறைவேற்றக்கூடிய தகுதி இருக்கின்றது – என்றார்.

## விஞ்ஞாபனங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

முக்கியமாக இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன நிலைப்பாட்டை எடுக்கவுள்ளது என்று பலரும் எதிர்பார்த்துள்ளார்கள்.

குறிப்பாகத் தேர்தலில் தமிழ் மக்களின் விடுதலை, தமிழ் மண்ணின் விடுதலை மற்றும் ஏனைய பிரச்சினைகளின் தீர்வுக்காகப் பல விடயங்கள் குறித்து நாம் அதிகாரபூர்வமற்ற வகையிலும் வேட்பாளர்களின் கட்சிகளுடனும் பேச்சு நடத்தி வருகின்றோம்.

இன்னும் பல கட்சிகளுடன் பேசவேண்டியுள்ளது. அவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்காக என்ன விடயங்களை குறிப்பிடுகிறார்கள் என்பதையும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கும் விடயங்களையும் எதிர்பார்க்கின்றோம்.

அந்தத் தேர்தல் அறிக்கையின் அடிப்படையிலும், மக்களுடன் மாவட்டங்கள் ரீதியாக முன்னெடுக்கப்படும் கலந்துரையாடல்களில் எடுக்கப்படும் முடிவுகளுக்கு அமையவும் கூட்டமைப்பு தனது முடிவை அறிவிக்கவுள்ளது – என்றார். (ஐ-07)

## மதுபோதையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளைகளின் தந்தையான நடராஜா ஜெயாகரன் (வயது 40) எனத் தெரியவந்துள்ளது.

நண்பர்களுடன் இணைந்து மது அருந்திக் கொண்டிருந்த போதே, அவர் கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெல்லிப்பளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

## சஜித்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்பதே பொதுவான கருத்தாக உள்ளது. இந்த நிலையில் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்க முடிவு செய்யப்படும் என்று உறுதியாகத் தெரிவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## கனகராயன்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குளம், குறிசுட்டகுளம் சந்தியில் பயணித்த சைக்கிள் ஒன்றை அதே வழியில் வவுனியாவில் இருந்து யாழ் நோக்கி ஏ-9 வீதியில் பயணித்த பட்டா ரக வாகனம் ஒன்று மோதித் தள்ளியது.

இந்த விபத்தில் சைக்கிளில் பயணித்த புளியங்குளம், முத்துமாரி நகரைச் சேர்ந்த கறுப்பையா சத்தியநாதன் என்பவர் காயமடைந்த நிலையில் மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

விபத்தை ஏற்படுத்திய வாகனம் நிறுத்தாது தப்பிச் சென்றுள்ளது. கனகராயன்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ-100)

## 3 துப்பாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

03 துப்பாக்கிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. சந்தேநகர் பொன்னகர், துணுக்காய் பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடையவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மல்லாவி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## தமிழ்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதற்கான இணக்கப்பாடு எட்டப்படும் என்று நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் நேற்று முன் தினம் மூன்றாவது தடவையாக இடம்பெற்ற சந்திப்பின்போது 6 கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்த நிலையில் இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டிருக்கின்றது.

இதற்கமைய இன்று பொது இணக்கப்பாட்டுக்கான ஒப்பந்தத்தில் இந்தக் கட்சிகள் கைச்சாத்திடவுள்ளதுடன், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களிடமும், வெளிநாட்டுத் தூதரகங்களிடமும் தமிழர் தரப்பின் கோரிக்கைகளைக் கூட்டாக முன்வைத்து பேரம் பேசுவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## பயனற்ற தத்துவப் பேச்சு

சிறுபான்மை இனம் என்று விளிப்பதை தாம் ஏற்கவில்லை எனப் பெரும் தத்துவாசிரியர் போல மீண்டும் ஒரு தடவை கூறியிருக்கின்றார் ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸா.

ஜனாதிபதி வேட்பாளராகும் கனவுடன் விடயங்களை அணுக முற்பட்ட காலத்தில் இருந்தே இத்தகைய ஒரு தத்துவத்தை அவர் வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டார்.

நல்லதுதான். ஆனால் இந்தக் கருத்து நிலைப்பாடு வெறும் வாயளவுப் பேச்சாக இருக்கக் கூடாது. அது சொல்லிலும் செயலிலும் முழு அளவில் கடைப்பிடிக்கப்பட்டு – நடைமுறைப்படுத்தப்பட்டால்தான் – அதில் அர்த்தமும் நியாயமும் இருக்கும்.

இலங்கை வாழ் அனைத்து மக்களுக்கும் சமமான உரிமைகளை ஏற்படுத்துவது என்ற அவரது கருத்தும் –

சிறுபான்மை இனம் என்று ஒரு தரப்பை அழைப்பதை – விளிப்பதை – தன்னால் ஏற்க முடியாது என்ற அவரது பேச்சும் –

ஆழமாக ஊன்றிக் கவனிக்கப்பட வேண்டியவை. இந்த இரண்டு விடயங்களையும் இரண்டு முறைகளில் நிறைவேற்ற – நடைமுறைப்படுத்த – முடியும்.

அதில் எந்த முறைமையை மனதில் புதைத்து வைத்துக் கொண்டு இத்தகைய கருத்தை அவர் வெளிப்படுத்துகின்றார் என்பது முக்கியம்.

அது என்ன சஜித் பிரேமதாஸாவின் மேற்படி கருத்தை நடைமுறைப்படுத்துவதற்கான இரண்டு வழிமுறைகள்?

ஒரு சிறுபான்மை இனம் – அதுவும் இந்தத் தீவில் புராதனமான வேரோட்டங்களைக் கொண்ட தமிழினம் – தனது பாரம்பரிய தாயக பூமியில் தனது தனித்துவமான வழக்காறுகள், பண்பியல்புகள், நாகரிக நடைமுறைகள், வாழ்க்கைமுறை ஆகியவற்றைப் பேணி, கௌரவமாகவே வாழ விரும்புகின்றது. அதாவது தனது தனித்துவத்தைப் பேணி, நின்றபடி, தனது விடயத்தைத் தானே கையாண்டவாறு தன் இருப்பை நீடிக்க விரும்புகிறது. அது, அதன் பிறப்புரிமையும் கூட.

அந்தப் பிறப்புரிமையை அங்கீகரித்து, அதனடிப்படையில் இந்தத் தீவின் ஏனைய மக்கள் அனுபவிக்கும் சமவுரிமை, ஒரே நீதி ஆகியவற்றுடன் தன் இருப்பைத் தொடர அந்த இனத்தை அனுமதிப்பதும் –

அந்த உரிமை அங்கீகரிப்புடன் அந்த இனக் குழுமத்தை சிறுபான்மை இனம் என்று குறிப்பிடாமல் – விளிக்காமல் – பேரினத்துக்கு சமதையாக வாழவும் தன் இருப்பைத் தக்கவைத்துத் தொடரவும் வழி செய்வதும் ஒரு முறைமை.

அப்படியில்லாமல், பெரும்பான்மை இனத்தின் பேரினவாத ஆக்கிரமிப்பு மூலம் சிறுபான்மை இனத்தினை முழுதாகக் கபளீகரம் பண்ணி, அதன் தனித்துவ இருப்பையே சிதைத்தழித்து, பெரும்பான்மை இனத்துக்குள் முழுமையாக சிறுபான்மை இனம் கரைந்து அடங்கி, சிதைந்து போகச் செய்வதன் மூலம் இந்த நாட்டில் – தீவில் – சிறுபான்மை இனம் என ஒன்று இல்லை என்ற நிலைமை ஏற்படுத்துவதன் மூலமும், சிறுபான்மை இனம் என விளிக்கின்றமையை இல்லாமல் செய்யலாம். அது அடுத்த முறைமை.

இதில் எதனை சஜித் பிரேமதாஸா பிரேரிக்கின்றார் – முன்வைக்கின்றார் – என்பதே எம்முன் உள்ள கேள்வி; எம் முன் தொக்கி நிற்கும் சந்தேகம்.

தமிழர்கள் இந்தத் தீவில் நீதி, நியாயமான தீர்வு ஒன்றைப் பெற்று, கௌரவத்துடன் வாழ்வதற்கான எந்த யோசனைத் திட்டத்தையும் வெளிப்படுத்தாமல் – அல்லது வெளிப்படுத்த மறுத்து நின்றபடி – இந்தத் தீவில் சிறுபான்மை இனம் என ஒரு தரப்பை விளிக்கும் நிலைமையை இல்லாமல் செய்ய வேண்டும் என்று அவர் கூறுகின்றமை, பெரும்பான்மை பேரினவாதத்துக்குள் சிறுபான்மையை முற்றாக முடக்கி, அடக்கி, கரைத்து விடும் இலக்கைத்தான் அடிப்படையாகக் கொண்டதோ என்ற சந்தேகத்தையே தந்து நிற்கின்றது.

எழுபது ஆண்டுகளுக்கு மேல் இந்தத் தீவில் புரையோடிப் போயிருக்கும் இனச் சிக்கலுக்கு நியாயமான தீர்வு ஒன்றுக்கான திட்டத்தை – யோசனையை – முன்வைக்க மறுத்தபடி, இப்படித் தத்துவம் பேசுவது –

இந்த நாட்டில் சிறுபான்மை இனம் என ஒரு தரப்பைக் குறிப்பிட்டு அழைப்பதை தாம் விரும்பவில்லை என சஜித் கூறுகின்றமை வெறும் வாய்ச்சவடால் தத்துவம்தான். அதனால் பயனேதும் இல்லை.

# மக்கள் ஆணையை அரசியல்வாதிகள் மறப்பதே நாசகாரச் செயல்களுக்குப் மிகமுக்கிய காரணம்

## கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 13

மக்களின் ஆணையை அரசியல்வாதிகள் மறப்பதன் காரணத்தினாலேயே, இலஞ்சம் – ஊழல், வெள்ளைவான் கலாசாரம் போன்றவை நாட்டில் ஏற்பட்டுள்ளன என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

30 வருடங்களுக்கு முன்னர் நான் அருட்தந்தையாக இருந்தபோது, எமது பிரதேசத்தில் இருந்த ஓர் அரசியல்வாதி பிரதியமைச்சராக இருந்தார்.

எனினும், அவர் அப்போது நடைபெற்ற தேர்தலில் போட்டியிடவில்லை. இந்த நிலையில், ஒரு நிகழ்வொன்றில் நான் அவரைச் சந்தித்த போது ஏன் தேர்தலில் போட்டியிடவில்லை என்று வினவினேன்.

அதற்கு அவர், பணம் சம்பாதித்தது போதும் என்றும் இதனால் தான் தேர்தலில் களமிறங்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

அந்த அரசியல்வாதி அவ்வாறானதொரு கருத்தை வெளியிடுவார் என்று நான் அன்று நினைக்கவில்லை. இதுதான் இலங்கையின் நிலைப்பாடு. மக்களுக்குச் சேவையாற்றுவதே அரசியலில் பிரதான நோக்கமாகும்.

ஆனால், அதிகாரத்திற்கு வந்தவுடன் இந்தச் செயற்பாட்டை அரசியல்வாதிகள் மறந்து விடுகிறார்கள். இந்தக் கலாசாரத்தை இலகுவாக மாற்றியமைக்க முடியாது. அரசமைப்பின் ஊடாகத்தான் இதில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

இங்குள்ள மக்கள் எவரும் முட்டாள்கள் அல்லர். அனைத்து விடயங்களையும் அவர்கள் அவதானித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதை அரசியல்வாதிகள் புரிந்துக் கொள்ள வேண்டும்.

இதனை அரசியல்வாதிகள் மறப்பதனால் தான் ஊழல், இலஞ்சம், வெள்ளை வான் கலாசாரம் உள்ளிட்ட பல்வேறு நாசகார செயற்பாடுகள் நாட்டில் நடைபெறுகின்றன – என்றார். (ஐ)

# பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்; சஜித் பிரேமதாஸவுடன் கலந்துரையாடல்



கொழும்பு, ஒக். 13

கொழும்பில் வாழும் அரச தனியார் நிறுவனங்களில் உயர் பதவிகள் வகிக்கும் பெண்கள் அமைப்பு ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளா சஜித் பிரேமதாஸாவைச் சந்தித்து இந்த நாட்டில் வாழும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்களுக்கான சட்டம் ஒழுங்கு நீதி நியாயம் பற்றி கலந்துரையாடினார்கள்.

இந் நிகழ்வை மகளிர் மற்றும் சிறுவா விவகார அமைச்சா சந்திராணி பண்டார ஒழுங்கு படுத்தினார். இந் நிகழ்வு கோல்பேஸ் ஹோட்டலில் நடைபெற்றது. கொழும்பு மேயர் ரோசி சேனாநாயக்காவும் இதில் கலந்து கொண்டார்.

பெண்கள் சட்ட ரீதியாக எதிர்நோக்கும் பிரச்சினைகள், அலுவலகங்களில் பாலியல் வன்முறைகள் , சுயதொழில் கிராமத்துப் பெண்கள், கணவனை இழந்த விதவைகள், ஊனமுற்ற பெண்கள் தமது பிள்ளைகளை வளாத்துக் கொள்ள முடியாத நிலைமைப் பெண்களுக்கான தனியான பொலிஸ் நிலையம், பற்றியும் இங்கு பெண்கள் கேள்விகளைத் தொடுத்தனர்.

ஜனாதிபதி வேட்பாளா சஜித் இங்கு பதிலளிக்கையில் –

பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்ட பெண்களது வழக்குகள் 5 அல்லது 7 வருடங்கள் வரை நீதிமன்றங்களில் தீர்ப்பு வழங்காமல் காலம் எடுக்கப்படுகின்றது. இதனால் பெண்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இவற்றுக்கு தனியான நீதிமன்றம் நிறுவி உடன் தீர்வு காண உரிய அமைச்சின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும். ஒவ்வொரு பிரதேச செயலாளா பிரிவிலும் தொழிலுக்குச் செல்லும் பெண்களது பிள்ளைகளை பராமரிப்பதற்கு அரசால் பராமரிப்பு நிலையம் மற்றும் பாலர் பாடசாலைகள் நிறுவப்படும். முதற்கட்டமாக 2000நிலையங்கள்நிறுவப்படும். இவை மகளிர் சிறுவர் விவகார அமைச்சின் ஊடாக நிறுவப்படும். வீடுகளில் ஊனமுற்று தங்கியிருக்கும் பெண்களுக்குச் சுயதொழில் முயற்சிக்காக ஒரு ஊக்குவிப்புத் திட்டம் வகுப்படும். அத்துடன் பெண்களுக்குச் சிறுகைத்தொழில் கடன் வழங்கி அவர்களது உற்பத்திப் பொருள்களையும் சந்தைப் படுத்தல் போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

இந்த நாட்டில் ஆண்களை விட பெண்களே சகல துறைகளிலும் உயர் நிலையில் உள்ளனர். சனத்தொகையிலும் பெண்கள் 53 வீதமாக இலங்கையில் உள்ளனர். சகல அரச நிறுவனங்களிலும் 60 வீதமாக பெண்களே தொழில் செய்து வருகின்றனா. 80 வீதமான பெண்கள் பல்கலைக்கழகங்களில் கலைத்துறையே கற்றுவருகின்றனா. இவர்களை நவீன் கனனி, சந்தைப்படுத்தல், சொப்ட்வெயார் பொறியியல் சுகாதாரத்துறைகளில்உயர்கல்வி பயிலுவதற்கு உயர்கல்வி முறையில் மாற்றம் கொண்டு வருதல் வேண்டும். நாடளாவிய ரீதியில் தொழிற்சாலைகள் நிறுவுதல் வேண்டும். அந்தந்தப் பிரதேசத்தில் தொழிலற்ற யுவதிகளுக்கு அங்கு தொழில் வாயப்புக்களைப் பெற்று அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயாத்தவதற்காக ஓர் திட்டம் வகுக்கப்படும்.

மாகாணசபை, உள்ளூராட்சி மற்றும் நாடாளுமன்றத்தில் பெண்களது மக்கள் பிரதிநிதிகள் விகிதாசாரம் அதிகரிக்கப்படும். அரச நிறுவனங்களில் உள்ள பணிப்பளர் சபைகளுக்கு ஆகக் குறைந்தது 3 பெண்கள் நியமித்தல் போன்ற கோரிக்கைகளில் எதிர்காலத்தில் நிருவாக ரீதியில் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். தமது பெற்றோரின் சொத்துக்கள் ஆண்களுக்கே உரித்துடையாக்கப்படுகின்றன. இதனை பெண்களுக்கும் உரித்துடையதாக்கச் சொத்துரிமைச் சட்டம் மாற்றப்படல் வேண்டும் – என்றார். (ஐ)

**நாளை** 14.10.2019 திங்கட்கிழமை

நட்சத்திரம்: ரேவதி மு.ப 11.31 வரை
திதி : பிரதமை பி.இ 4.34 வரை
இராகுகாலம் : 7.32 – 9.02
சுப நேரம் : 12.02 – 1.32

# ரெலோவும் புளொட்டும் ஜே.வி.பிக்கு ஆதரவாம்!

கொழும்பு, ஒக். 13

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளான ரெலோ, புளொட் ஆகியன தங்களையே ஆதரிக்குமென மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

வடக்கு – கிழக்கைச் சேர்ந்த அரசியல்வாதிகள் யாருக்கு ஆதரவு வழங்கவுள்ளார்கள் என்பது குறித்து கருத்து தெரிவிக்கும்போது அந்தக் கட்சி இவ்வாறு தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்தக் கட்சிப் பிரதிநிதிகள் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிலர், தமக்கு ஆதரவை வழங்குவதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

அந்த வகையில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் ஆகிய இரு கட்சிகளுடன் பேச்சு நடத்தியிருந்தோம்.

எனவே, அந்தக் கட்சிகளும் தங்களுக்கே ஆதரவை வழங்குமென எதிர்பார்க்கின்றோம். மேலும், எமது கொள்கைகளை அக் கட்சிகள் ஏற்றுள்ளன – என்றனர். (ஐ)

# கோட்டாபயவே அடுத்த ஜனாதிபதி அது இப்போது உறுதியாகியுள்ளது!

## கூறுகின்றார் மஹிந்த ராஜபக்ஷ



கொழும்பு, ஒக். 13

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டின் அடுத்த ஜனாதிபதியாகப் பதவியேற்பார் என்ற நம்பிக்கை எல்பிட்டிய தேர்தல் ஊடாக ஏற்பட்டுள்ளதென எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

எல்பிட்டிய தேர்தலில் மாபெரும் வெற்றியை பொதுஜன பெரமுன தற்போது பெற்றுள்ளது. அதற்கு மக்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த வெற்றியின் ஊடாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலிலும் நாமே வெற்றி பெறுவோம் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது – என்றார். (ஐ)

# கால்நடை மருத்துவ அதிகாரி மீது பாண்டியன்குளத்தில் தாக்குதல்!

முல்லைத்தீவு, ஒக். 13

முல்லைத்தீவு – மாந்தை கிழக்கு பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி மதுபோதையில் இருந்தவரால் தாக்கப்பட்டுள்ளார்.

இதனை வன்மையாக கண்டிப்பதாக இலங்கை அரச கால்நடை வைத்தியர் சங்கம் தெரிவித்துள்ளது.

'முல்லைத்தீவு – மாந்தை கிழக்கு பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி, கால்நடைகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக பாண்டியன் குளம் பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது, மதுபோதையில் இருந்த ஒருவர் வைத்தியர் மீது சரமாரியாகத் தாக்கியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அப்பகுதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டபோதிலும் இதுவரை எவ்விதமான ஆக்கபூர்மான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, இச்சம்பவம் காரணமாக மிகவும் பின்தங்கிய மக்கள் வாழும் அவ்விடத்தில் சேவையை மேற்கொள்ள கால்நடை வைத்தியர்கள் தயங்குகின்றனர்.

ஆகவே இந்தச் சம்பவத்தை அரச கால்நடை வைத்தியர்கள் சங்கம் வன்மையாகக் கண்டிப்பதோடு உரிய அதிகாரிகள் இதற்கு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வைத்தியர்கள் சேவையாற்றுவதற்குச் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் எனவும் கோரியுள்ளது.

மேலும் வட. மாகாண கால்நடை வைத்திய அலுவலகங்களின் வாகனப் பற்றாக்குறை தொடர்பாக வட. மாகாண ஆளுநர் மற்றும் பிரதம செயலாளர் ஆகியோருக்கு சங்கம் தெரியப்படுத்தியிருந்த போதும், அதற்கு இதுவரை தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# பிரசாரங்களில் சிறுவரை ஈடுபடுத்துவதற்குத் தடை!

கொழும்பு, ஒக். 13

அரசியல் நடவடிக்கைகளில் சிறுவர்களை ஈடுபடுத்த வேண்டாம் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

அரசியல் நடவடிக்கைகளுக்காகச் சிறுவர்களைப் பயன்படுத்த வேண்டாம் என அனைத்து அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் உள்ளிட்ட தரப்பினர்களிடம் கேட்டுக் கொள்கின்றோம். ஜனாதிபதித் தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் சிறுவர்கள் பல்வேறு செயற்பாடுகளின் ஊடாக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுகிறார்கள் என பொதுமக்கள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுமாயின் அது தொடர்பாக 1929 என்ற சிறுவர் உதவி தொலைபேசி இலக்கத்துக்கு அல்லது எழுத்து மூலம் அல்லது தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு உடனடியாக அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

முகவரி: – தலைவர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, இலக்கம் 330, தலவத்துக்கொட வீதி, மாதிவெல

தொலைநகல்: – 0112 778 815

மின்னஞ்சல் : – investigationchildprotection.gov.lk" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வடமாகாண பண்பாட்டு விழாவில் 13 பேருக்கு இளம் கலைஞர் விருது!



வவுனியா, ஒக். 13

வவுனியாவில் இடம்பெற்ற வடக்கு மாகாணப் பண்பாட்டு பெருவிழாவின் முதலாம் நாள் நிகழ்வில் 13 பேர் இளம் கலைஞர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

வடமாகாண பண்பாட்டு பெருவிழா வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நேற்று முன் தினம் இரு அமர்வுகளாக நடைபெற்றது.

வடக்கு மாகாணப் பண்பாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் காலை அமர்வு அமரர்பொன்.பூலோகசிங்கம் அரங்கில் இடம்பெற்றது. இதில் கலைநிகழ்வுகள், ஆய்வரங்கு உள்ளிட்ட நிகழ்வுகள் இடம்பெற்றன.

மாலை அமர்வு வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் திருமதி சுஜீவா ஜீவதாஸ் தலைமையில் அமரர் வேலுப்பிள்ளை சிவசேகரம் அரங்கில் நடைபெற்றது. இதன் போது ஊடகம், புகைப்படம், நாட்டுக்கூத்து, நடனம், இசை, கலை உள்ளிட்ட 13 துறைகளுக்கான இளம் கலைஞர் விருதுகள் வழங்கப்பட்டன.

அத்துடன் மாலை அமர்வில் புத்தாக்க நடனம், பரதநாட்டியம், மங்கல இசை, நபான் நடனம், கிராமிய நடனம், முல்லைமோடி நாட்டுக் கூத்து உள்ளிட்ட நிகழ்வுகளும் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் ஐ.எம் ஹனீபா, மேலதிக அரச அதிபர் தி.திரேஸ்குமார், பிரதேச செயலாளர் கா.உதயராசா, பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள அதிகாரிகள், கலைஞர்கள், உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (ஐ – 100)

# பிரம்படி படுகொலையின் 32 ஆவது நினைவேந்தல்









யாழ்ப்பாணம், ஒக். 13

கொக்குவில் – பிரம்படி படுகொலையின் 32 ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று சனிக்கிழமை நடைபெற்றது.

இந்தப் படுகொலையில் உயிரிழந்தவர்களின் உறவினர்களாலும், அப்பகுதி மக்களாலும் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நினைவேந்தல் நிகழ்வில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டு உயிரிழந்தவர்களுக்காக அஞ்சலி செலுத்தினர்.

1987 ஆம் ஆண்டு இந்தியப் படையினர் பல்வேறு படுகொலைகளை அரங்கேற்றியிருந்தனர்.

இப்படுகொலைகளில் முதலாவதாக 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 11ஆம், 12 ஆம் திகதிகளில் கொக்குவில் பிரம்படியில் 50 மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

பிரம்படிச் சந்தியில் உயிரிழந்தவர்களின் நினைவாக நினைவுத் தூபியும் அமைக்கப்பட்டிருந்தது.

இந்த நினைவுத் தூபி முன் நேற்று நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச சபை தலைவர், யாழ்.மாநகர பிரதி மேயர், சபை உறுப்பினர்கள், உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலிகளைச் செலுத்தினர். (ஐ – 7)

# சீனாவுக்கும் தமிழகத்திற்கும் இடையே 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வர்த்தகம்




மோடி பெருமிதம்

சென்னை, ஓக். 13

சீனாவுக்கும் தமிழகத்திற்கும் இடையே 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வர்த்தகம் இருந்ததாக நேற்று நடைபெற்ற சந்திப்பின்போது மோடி கூறினார்.

சீன அதிபர் ஜி ஜின்பிங் – இந்திய பிரதமர் மோடி ஆகியோரின் முறைசாரா சந்திப்பு நிகழ்ச்சி, சென்னையை அடுத்த சுற்றுலா நகரமான மாமல்லபுரத்தில் நேற்றுமுன்தினம் தொடங்கியது. நேற்றுமுன்தினம் மாலை 5 மணிக்கு அர்ஜுனன் தபசு பகுதிக்கு வந்த சீன அதிபரை பிரதமர் மோடி வரவேற்றார். பின்னர் இருவரும் உரையாடியபடி அங்குள்ள சுற்றுலாப் பகுதிகளைப் பார்த்து ரசித்தனர். கலைநிகழ்ச்சிகளையும் கண்டுகளித்தனர்.

பின்னர் இரவு 7.30 மணி அளவில் அங்கேயே சீனஅதிபர் ஜின்பிங்குக்கு இரவு விருந்து அளிக்கப்பட்டது. இதில், பிரதமர் மோடி உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

இந்நிலையில், நேற்றுக் காலை பிரதமர் மோடி தங்கி இருக்கும் தாஜ் பிர்மேன் கோவ் ஹோட்டலில் மீண்டும் இரு தலைவர்களும் சந்தித்து பேசினர். கண்ணாடி அறை யில் இருந்தபடி கடலையும் இயற்கையும் ரசித்தவடி இரு தலைவர்களும் சுமார் ஒரு மணி நேரம் ஆலோசனை நடத்தினர்.

இந்த ஆலோசனையின்போது, இருதரப்பு உறவுகள் மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து பேசினர். ஆலோசனைக்குப் பிறகு வெளியே வந்த இருவரும் கடற்கரையை ரசித்தனர்.

அதன்பின்னர் மோடி, ஜி ஜின்பிங் தலைமையில் இரு நாடுகளின் உயர்மட்ட அதிகாரிகள் அளவிலான பேச்சு நடைபெற்றது. இதில் சீனவெளியுறவு அமைச்சர் வாங் யி, இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் மற்றும் உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

அப்போது சீன அதிபரை வரவேற்று பேசிய மோடி, மதிப்பிற்குரிய விருந்தினரை வரவேற்கிறேன் என தமிழில் பேசினார். உலகின் மிகவும் தொன்மையான மொழியான தமிழில் நான் பேசுகிறேன் என்றார்.

இந்தியாவும் சீனாவும் பொருளாதார சக்திகளாக இருக்கின்றன என்றும், 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, சீனாவுக்கும் தமிழகத்திற்கும் இடையே ஆழமான கலாசாரம் மற்றும் வணிக உறவு இருந்தது என்றும் மோடி கூறினார்.

## கடற்கரையில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டார் பிரதமர் மோடி!



சீன அதிபருடனான சந்திப்புக்கு மத்தியில் நேற்றுக் காலை நடைபயற்சியின்போது கடற்கரையை பிரதமர் மோடி சுத்தம் செய்தது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சீன அதிபர் ஜி ஜின்பிங் – இந்திய பிரதமர் மோடி ஆகியோரின் 2 நாள் சந்திப்பு நிகழ்ச்சி, சென்னையை அடுத்த சுற்றுலா நகரமான மாமல்லபுரத்தில் நேற்றுமுன்தினம் தொடங்கியது.

இந்நிலையில் நேற்றுக் காலை கடற்கரையில் பிரதமர் மோடி நடைபயிற்சி மேற்கொண்டபோது சுமார் அரை மணி நேரம் துப்பரவு பணியில் ஈடுபட்டார். கடற்கரையில் ஆங்காங்கே பொதுமக்களால் வீசப்பட்டிருந்த பிளாஸ்டிக் குப்பைகளை சேகரித்து, ஹோட்டல் ஊழியர் ஜெயராஜ் என்பவரிடம் கொடுத்துள்ளார்.

இத்தகவலை தனது டுவிட்டர் பக்கத்தில் வீடியோவுடன் பதிவிட்டுள்ளார் மோடி. அதில், நமது பொது இடங்கள் சுத்த மாகவும் துப்புரவாகவும் இருப்பதை உறுதி செய்வோம்! நாம் உடற்திறனுடனும் ஆரோக்கியமாகவும் இருப்பதை உறுதி செய்வோம்! என்று மோடி குறிப்பிட்டுள்ளார்.

## இந்திய பணக்காரர்கள் பட்டியலில் முகேஷ் அம்பானி தொடர்ந்து முதலிடம்



இந்திய பணக்காரர்கள் பட்டியலில் முகேஷ் அம்பானி தொடர்ந்து முதலிடம் வகிக்கிறார்.

அமெரிக்காவில் பிரபல போர்ப்ஸ் பத்திரிகை, இந்தியாவின் மிகப்பெரும் கோடீஸ்வரர்கள் பட்டியலை (2019) வெளியிட்டுள்ளது. இந்த பட்டியலில், ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத் தலைவர் முகேஷ் அம்பானி தொடர்ந்து முதல் இடத்தை தக்க வைத்துள்ளார். 12ஆவது ஆண்டாக முதலிடத்தில் நீடிக்கும் முகேஷ் அம்பானியின் சொத்து மதிப்பு 51.4 பில்லியன் டொலராக உள்ளது.

தொழிலதிபர் கவுதம் அதானி 8 இடங்கள் முன்னேறி பட்டியலில் 2ஆவது இடத்தை பிடித்துள்ளார். அவரது சொத்து மதிப்பு 15.7 பில்லியன் டொலராக உள்ளது. இந்துஜா சகோதரர்கள் (15.6 பில்லியன்), பலோன்ஜி மிஸ்திரி (15 பில்லியன் டொலர்), உதய் கோட்டக் (14.8 பில்லியன்) ஆகியோர் அடுத்தடுத்த இடங்களில் உள்ளனர்.

போர்ப்ஸ் பத்திரிகையின் உலக கோடீஸ்வரர்கள் பட்டியல் (2019) சமீபத்தில் வெளியானது. அந்தப் பட்டியலில் முகேஷ் அம்பானி 13ஆவது இடத்தில் இருந்தார். அமேசான் அதிபர் ஜெப் பெசோஸ் முதல் இடத்திலும், மைக்ரோசாப்ட் நிறுவனர் பில் கேட்ஸ் இரண்டாவது இடத்திலும் இருந்தனர்.




# அமெரிக்காவில் வீதியில் படகை நிறுத்தி பருவநிலை ஆர்வலர்கள் போராட்டம்

பருவநிலை மாற்றத்திற்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என உலகம் முழுவதும் உள்ள பருவநிலை ஆர்வலர்கள் வலியுறுத்தி வருகின்றனர். சமீபத்தில் ஐ.நா சபையில் நடைபெற்ற பருவநிலை மாற்ற மாநாட்டில், சுவீடன் நாட்டைச் சேர்ந்த பருவநிலை ஆர்வலரான கிரேட்டா தன்பெர்க் பருவநிலை மாற்றம் பற்றிய விளைவுகள் குறித்து விளக்கினார். இதை தொடர்ந்து பல்வேறு இடங்களில் பருவ நிலை மாற்ற போராட்டங்கள் நடைபெற்று வந்தன.

இந்நிலையில், நியூயோர்க் நகரில் உள்ள மான்ஹாட்டன் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை, பருவநிலை மாற்றத்தை தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வலியுறுத்தி பருவ நிலை ஆர்வலர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நகரின் முக்கிய சாலையில், 'உடனே செயற்படு' என்ற வாசகம் எழுதப்பட்ட பச்சை நிற படகு ஒன்றை நிறுத்தி, ஓரேஞ் நிற லைப் ஜாக்கெட்டுகளை அணிந்து போராட்டம் நடத்தினர். இதனால் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது. தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்ட 62 பேரை கைது செய்தனர்.

கடந்த திங்கள் அன்று இதே மான்ஹாட்டன் பகுதியில் பருவநிலை மாற்றத்திற்கான நடவடிக்கைகள் எடுக்கக்கோரி பேரணி நடத்திய பருவநிலை ஆர்வலர்கள் 90 பேரை காவல் துறை கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



62 பேர் பொலிஸாரால் கைது

# ஈரான் எண்ணெய் கப்பல் மீதான ஏவுகணை தாக்குதலால் பதற்றம்

## வளைகுடாவில் மீண்டும் நிலைமை மோசமாகின்றது



தெஹ்ரான், ஒக்.13

ஈரான் எண்ணெய் கப்பல் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டதால் வளைகுடா பிராந்தியத்தில் மீண்டும் பதற்றம் அதிகரித்து உள்ளது.

அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான மோதல் காரணமாக வளைகுடா பிராந்தியத்தில் ஏற்கனவே பதற்றம் நீடித்து வந்த நிலையில், சவுதி அரேபியாவின் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை மற்றும் எண்ணெய் வயல் மீது கடந்த மாதம் ஆளில்லா விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனால் சவுதி அரேபியாவில் 50 சதவீதத்துக்கும் அதிகமான மசகு எண்ணெய் உற்பத்தி பாதிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலுக்கு ஏமனில் உள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்கள் பொறுப்பேற்றபோதும் ஈரான்தான் தாக்குதல் நடத்தியதாக அமெரிக்கா மற்றும் சவுதி அரேபியா குற்றம் சாட்டின. ஆனால் ஈரான் இந்தக் குற்றச்சாட்டைத் திட்டவட்டமாக மறுத்தது.

எனினும் ஈரானை அச்சுறுத்தும் விதமாக அமெரிக்கா, வளைகுடா பிராந்தியத்தில் இராணுவ வீரர்களையும், போர்த் தளவாடங்களையும் குவித்தது. இதன் காரணமாக வளைகுடாப் பிராந்தியத்தில் மேலும் பதற்றம் அதிகரித்தது.

இந்த நிலையில் சவுதி அரேபியாவின் ஜெட்டா துறைமுகம் அருகே சென்று கொண்டிருந்த ஈரான் அரசு எண்ணெய் நிறுவனத்துக்கு சொந்தமான 'சபிதி' என்ற எண்ணெய் கப்பல் மீது நேற்று ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இது குறித்து ஈரான் அரசு எண்ணெய் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பவை வருமாறு: –

சவுதி அரேபியா துறைமுகத்தில் இருந்து 100 கி.மீ. தொலைவில் பயணித்துக் கொண்டிருந்த 'சபிதி' எண்ணெய் கப்பலில் அடுத்தடுத்து 2 முறை பயங்கர வெடிப்பு நேரிட்டது.

அநேகமாக இது ஏவுகணைத் தாக்குதலினால் ஏற்பட்டிருக்கலாம். கப்பலில் உள்ள மாலுமிகள் யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. அதே போல் கப்பலும் உறுதித் தன்மையுடன் இருக்கிறது.

எனினும் ஏவுகணை தாக்குதல் காரணமாக கப்பலில் இருந்த மசகு எண்ணெய் கடலில் கொட்டியது. இது ஒரு பயங்கரவாத தாக்குதல் என்பது உறுதி செய்யப்பட்டு உள்ளது. எனினும் தாக்குதல் நடத்தியது யார் என்பதை உறுதி செய்வதில் குழப்பம் நீடிக்கிறது. – இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு வளைகுடா பிராந்தியத்தில் சவுதி அரேபியா உள்பட பிற வெளிநாட்டு சரக்கு கப்பல்கள் இதே போன்ற தாக்குதல்களுக்கு உள்ளாகி இருக்கின்றன. ஆனால் ஈரான் கப்பல் மீது தாக்குதல் நடத்தப்பட்டது இதுவே முதல் முறை.

இந்தத் தாக்குதல் காரணமாக மீண்டும் வளைகுடா பிராந்தியத்தில் பதற்றம் அதிகரித்து உள்ளது. இதற்கிடையே ஈரான் எண்ணெய் கப்பல் மீது தாக்குதல் நடத்தப்பட்ட செய்தி வெளியானதும் மசகு எண்ணெயின் விலை 2 சதவீதத்துக்கும் அதிகமாக உயர்ந்ததாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன

## சிரியாவில் வலுக்கும் மோதல்:

# துருக்கி – குர்து படைகள் இடையே மத்தியஸ்தம் செய்ய தயார் – டிரம்ப்

வொஷிங்டன், ஒக்.13

துருக்கியின் எல்லையை யொட்டி இருக்கும் சிரியாவின் வடக்கு பகுதியில் குர்து இன போராளிகளை குறிவைத்து துருக்கி ராணுவம் தொடர்ந்து 3 ஆவது நாளாக நேற்றும் தாக்குதல் நடத்தியது. வான் வழியாகவும், தரைவழியாகவும் நடத்தி வரும் அதிரடி தாக்குதல்களில் இதுவரை 100 இற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதே போல் குர்து இன போராளிகள் நடத்திய பதில் தாக்குதலில் துருக்கி ராணுவ வீரர் ஒருவர் பலியானார். மேலும் 3 வீரர்கள் படுகாயமடைந்தனர். இந்த மோதல் காரணமாக சிரியாவின் வடக்கு பகுதியில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டம் கூட்டமாக பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர்.

குர்து போராளிகள் மீதான துருக்கியின் இந்த நடவடிக்கைகளுக்கு உலக நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளதோடு உடனடியாக சண்டையை நிறுத்தும்படி வலியுறுத்தி உள்ளன.

இந்த நிலையில் துருக்கி ராணுவம் மற்றும் குர்து போராளிகள் இடையே உடன்பாட்டை ஏற்படுத்த மத்தியஸ்தம் செய்ய தயார் என அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், எங்களிடம் 3 வழிகள் உள்ளன. ஒன்று ஆயிரக்கணக்கான வீரர்களை அனுப்பி ராணுவ ரீதியாக வெல்வது. 2 ஆவது துருக்கி மீது பொருளாதார தடை விதிப்பது. 3 ஆவது துருக்கி மற்றும் குர்து போராளிகள் இடையே மத்தியஸ்தம் செய்வது. இதில் எங்களால் மத்தியஸ்தம் செய்ய முடியும் என்று நான் நம்புகிறேன் என கூறினார்

# கண்ணுக்கு தெரியாத மை தயாரித்து கட்டுரை எழுதிய மாணவி ஹாகா



டோக்கியோ, ஒக்.13

ஜப்பானில் உள்ள மீ பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டு வரலாற்று பட்டப்படிப்பு படித்து வருபவர் ஹாகா (வயது 19). இந்த பல்கலைக்கழகத்தில் வரலாற்று பேராசிரியராக பணியாற்றும் யூஜி யாமடா, நிஞ்சா வரலாறு குறித்து கட்டுரை எழுதி வர வேண்டும் என்றும், அதிக கற்பனை திறனுடன் கூடிய கட்டுரைக்கே அதிக மதிப்பெண் என்றும் கூறினார்.

சிறுவயது முதலே நிஞ்சா வரலாற்றில் அதிக ஆர்வம் கொண்ட மாணவி ஹாகா, அபுரிதசி என்ற பழங்கால நுட்பத்தை பயன்படுத்தி கட்டுரை எழுத திட்டமிட்டார். இதற்காக சோயாபீன்ஸை ஊற வைத்து, அதை இடித்து, துணியில் பிழிந்து சாறு எடுத்து, நீருடன் கலக்கி சரியான பதம் கிடைக்க 2 மணி நேரம் காத்திருந்து கண்ணுக்கு தெரியாத மையை தயாரித்தார்.

பின்னர் அதனை கொண்டு மெல்லிய தூரிகையால் வெள்ளை காகிதத்தில் தனது கட்டுரையை எழுதினார். ஈரம் காய்ந்ததும் அந்த காகிதத்தில் எழுத்துக்கள் மறைந்துவிட்டன. அதனை தொடர்ந்து, கட்டுரையை வெற்று காகிதமாக பேராசிரியரிடம் சமர்ப்பித்த அவர், அதில் ஒரு ஓரத்தில் காகிதத்தை சூடு செய்யவும் என சாதாரண பேனாவில் எழுதி வைத்திருந்தார்.


அதன்படி பேராசிரியர் கியாஸ் அடுப்பை பற்ற வைத்து காகிதத்தை சூடாக்கியபோது, அதில் எழுத்துக்கள் தோன்றியமையைக் கண்டு ஆச்சரியமடைந்தார். அதன் பின்னர் கற்பனை திறனால் தன்னை ஆச்சரியமடைய வைத்த ஹாகாவின் கட்டுரைக்கு பேராசிரியர் முதல் மதிப்பெண் வழங்கினார்.

# சீனாவில் பாலம் இடிந்து வீழ்ந்த விபத்தில் 3 பேர் உயிரிழப்பு

சீனாவின் ஜியாங்சு மாகாணத்தில் உள்ள வுக்சி நகரில் போக்குவரத்து நெரிசலை தவிர்ப்பதற்காக மேம்பாலம் ஒன்று கட்டப்பட்டு இருந்தது. நேற்று முன்தினம் இரவு இந்த மேம்பாலத்தில் 3 கார்கள் மற்றும் 2 லொறிகள் சென்று கொண்டிருந்தன. மேம்பாலத்துக்கு கீழே உள்ள சாலையிலும் வாகனங்கள் சென்று கொண்டிருந்தன.

அப்போது சற்றும் எதிர்பாராத வகையில் மேம்பாலம் திடீரென இடிந்து சாலையில் சென்ற 2 கார்கள் மற்றும் சாலையோரம் நிறுத்தப்பட்டிருந்த ஒரு கார் மீது விழுந்தது. அதே போல், மேம்பாலத்தில் சென்ற 3 கார்கள் மற்றும் 2 லொறிகளும் சாலையில் விழுந்தன. இந்த கோர விபத்தில் சாலையில் சென்ற 2 கார்களில் இருந்த 3 பேர் உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே பலியாகினர். மேலும் 2 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்பு வீரர்கள் கிரேன், பொக்லைன் எந்திரம் உள்ளிட்டவற்றின் உதவியுடன் இடிபாடுகளை அகற்றி வாகனங்களுக்குள் சிக்கியிருந்தவர்களை மீட்டனர். சம்பவ இடத்தை நேரில் ஆய்வு செய்த நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள், லொறி



ஒன்று அனுமதிக்கப்பட்டதை விட அதிகளவில் சுமை ஏற்றி சென்றதால், மேம்பாலம் இடிந்து விழுந்ததாக தெரிவித்துள்ளனர். எனினும் தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.

## யாழ். இந்துக் கல்லூரிக்கு பதில் அதிபர் நியமனம்

யாழ்ப்பாணம், ஒக். 13

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பதில் அதிபராக ரட்ணம் செந்தில்மாறன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இது வரை காலமும் பதில் கடமையாற்றி வந்த சதா சிவம் நிமலன், மாணவர் அனுமதிக்காக கையூட் டுப் பெற்றகுற்றச்சாட்டில்கைதுசெய்யப்பட்டதையடுத்து, கல்வி அமைச்சில் உதவிக் கல்விப் பணிப்பா ளராகக் கடமையாற்றும் ஆர். செந்தில்மாறன் பதில் அதிபராக நியமிக்கப்பட்டிருக்கி றார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவனான ஆர். செந்தில்மாறன், யாழ். பல் கலைக்கழகத்தில் விஞ்ஞானமாணி பட்டத் தைப் பெற்றிருப்பதுடன், பட்டப் பின் தகைமையையும் கொண்டவர்.

இலங்கைச் சட்டக் கல்லூரியில் பயின்று தகுதி பெற்றதுடன் இலங்கைகல்விநிர்வாகசேவையிலும் திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு கல்வி அமைச்சில் உதவிக் கல்விப் பணிப்பா ளராகக் கடமையாற்றி வருகிறார். (ஐ)

## மின்தடை

யாழ்ப்பாணம், ஒக். 13

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராம ரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**வவுனியா பிரதேசத்தில் -**

கோவில்குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை ஆகிய பிரதேசங்களிலும், மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# இந்து தேசிய மகாசபை: அமைச்சரவை ஒப்புதல்



கொழும்பு, ஒக். 13

இலங்கை இந்து தேசிய மகாசபையை உருவாக் குவதற்காக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலை வரான அமைச்சர் மனோ கணேசனால் முன்வைக் கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்ச ரவை ஏற்றுக்கொண்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட மனோ கணேசன் –

தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் என்ற முறையில் என்னால் அமைச் சரவையில் முன்வைக்கப்பட்ட மேற் படியோசனை அமைச்சரவையினால்ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, இந்நாட்டில் இந்து சமய விவ காரங்கள் தொடர்பில் தேசியரீதியாக ஒன்பது மாகாணங்கள், அனைத்து மாவட்டங்கள், அனைத் துப் பிரதேச செயலர் பிரிவுகள் என்ற அடிப்படை களில் நாடு தழுவிய வலைப்பின் னல் அமைப்பு சட்டப்படி உருவாக்கப்படும்.

நாடெங்கும் பிரதேச, மாவட்ட சபைகள் உருவாக்கப்பட்டு, அவற்றில் இருந்து தேசிய சபை உருவாக்கப்பட்டு, முழு நாட்டிலும் வாழும் இந்துக்கள் மத்தியில் ஐக்கியத்தையும், ஒரு சமச் சிரான அணுகுமுறையையும், அதே வேளை யில் ஏனைய சகோதர மதத்தவருடன் இணக்கப் பாட்டையும் இலங்கை இந்து தேசிய மகாசபை ஏற்படுத்தும்.

இதில், நாடெங்கும் உள்ள இந்து மத குரும ார்கள், ஆலய அறங்காவலர்கள், அறநெறி பாடசாலைகள், இந்து கல்லூரிகள், இந்து சமூக அமைப்புகள் ஆகிய ஐந்து இந்து மத தூண்களும் கூட்டிணைக்கப்படும்.

இந்து மதம் தொடர்பில் அதிகாரபூர்வமாக இந்த நிறுவனம், இலங்கைக்கு உள்ளேயும், வெளி நாடுகளிலும் இலங்கை இந்து மதத்தவர்களை பிரதிநிதித்துவம் செய்யும். – என்றார். (ஐ)

# வவுனியாவில் வீதி பாதுகாப்பு வார நடைபவனி







வட மாகாண ஆளுநரின் வழிநடத்தலில் ஆரம்ப மான வீதிப் பாதுகாப்பு வாரத்தினை முன்னிட்டு வீதி பாதுகாப்பு வார நடைபவனி வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ஐ.எம். ஹனீபா தலைமையில் நேற்றுமுன் தினம் காலை 8.30 மணிக்கு வவுனியா மாவட்ட செயல கத்திலிருந்து ஆரம்பமாகி ஏ9 வீதியூடாக வவுனியா நகரசபையினை சென்றடைந்தது.

வடமாகாணத்தில் அதிகரித்து வரும் வீதி விபத்துக் களை கட்டுப்படுத்தும் நோக்கில் நடைபெறும் இந்த வீதி பாதுகாப்பு வாரத்தின் போது வடக்கு முழுவதும் பல்வேறு மட்டங்களில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக வீதி நாடகங்கள், பாடசாலை ரீதி யான பேச்சுபோட்டிகள், பாடசாலைகளில் மாணவ போக்குவரத்து பிரிவினை ஸ்தாபித்தல், குறுந்திரைப் படம் துணுக்குகள் உருவாக்கம், சிறந்த வாகன ஓட்டு நர்களை தெரிவு செய்து அவர்களை கௌரவித்தல், விபத்துக்கள் குறைந்த பொலிஸ் நிலையங்களை தெரிவு செய்தல், அரச அலுவலர்களுக்கான இலவச உடற்தகுதி மருத்துவ பரிசோ தனை மற்றும் வடமாகாணத் தில் விபத்துக்கள் அதிகமான இடங்களை இனங்கண்டு அவ் விடங்களில் போக்குவரத்து பொலிஸாரின் மாதிரிகளை காட்சிப்படுத்துவது உள்ளிட்ட பல விழிப்புணர்வு செயற்பாடு கள் நடைபெற்றுக் கொண்டி ருக்கின்றன.

இந்த நடைபவனியில் உதவி மாவட்ட செயலாளர் கம லதாசன், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், போக்கு வரத்து பிரிவு உத்தியோகத் தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். நகரசபை முன்றிலை சென்றடைந்த பேரணியின் பின்னர் அரசாங்க அதிபர், மாவட்ட செயலக உத்தியோகத்தர்களினால் விழிப்புணர்வு பலூன் பறக்க விடப்பட்டது. அத்துடன் இறுதியில் அர சாங்க அதிபரின் உரையும் இடம்பெற்றிருந்தது. கடந்த 7ஆம் திகதி ஆரம்பமான வடமாகாண வீதிப்பாதுகாப்பு வாரமானது இன்று வரை நடைபெறுகின்றமை குறிப் பிடத்தக்கது. (இ -100)

## தொண்டமான் சஜித்தை ஆதரித்தால் வரவேற்போம்



கொழும்பு, ஒக். 13

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவு வழங்குமானால் அதனை நாம் வரவேற்போம் – என்று மலையக மக்கள் முன்னணியின் தலை வரான அமைச்சர் வீ. இராதா கிருஷ்ணன் தெரிவித்தார்.

சீரற்ற காலநிலையால் பொக வந்தலாவ பகுதியில் பாதிக்கப் பட்ட மக்களை நேற்று முன்தினம் பார் வையிட்ட பின்னர், சமகால அரசியல் நிலைவரங்கள் குறித்தும் கருத்து வெளி யிடுகையிலேயே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேம தாசவுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவு வழங்குமானால் அதனை நாம் வரவேற்போம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் வெற் றியை உறுதிப்படுத்துவதற்காக யார் வந்தாலும் – இணைந்தாலும் அதனை நாம் எதிர்க்கமாட்டோம். என்றும் அவர் கூறினார். (ஐ)

northern PC Park
கணினி உலகில் நம்பகமான சேவையில் 10 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
வடக்கின் கணினிப் பூங்கா
# 10, Muddaskada Junction Stanly Road, Jaffna
தரமான கணினிகளைப் பெற்றுக் கொள்ள நம்மை நாடுங்கள்
www.pcpark.co
info.pcpark.co
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern Pc Park
0777570124
0773366443
0766999597
0717772377
0215675566
0212229581
0212222050
0212220388

# சஜித் பக்கம் பாயவுள்ள சு.கவின் 5 எம்.பிக்கள்!

## கட்சியையும் கைப்பற்றத் திட்டம்

கொழும்பு, ஒக். 13

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 5 நாடாளு மன்ற உறுப்பினர்கள் அடுத்த சில நாள்களில் சஜித் பிரேமதாஸவுக்கு தமது ஆதரவை வெளிப் படுத்தவுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

கடந்த சில தினங்களாக நடந்த தீவிர பேச் சையடுத்து, இந்த இணக்கப்பாடு எட்டப்பட் டுள்ளது.

சுதந்திரக்கட்சி ஜனாதிபதித் தேர்தலில் பெரமுனவை ஆதரிக்க எடுத்த முடிவு கட்சிக் குள் ஒரு தரப்பைக் கடுமையாக அதிருப்தி யடைய வைத்துள்ளது. குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் அவரது ஆதரவு அணியினர் கடுமையான அதிருப்தியுடன் உள்ளனர்.

சந்திரிகா ஆதரவு எம்.பிக்கள் ஐவரே சஜித்தை ஆதரிக்கவுள்ளனர் எனக் கூறப் படுகின்றது. கடந்த சில தினங்களாக மங்கள சமரவீர, மற்றும் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோருடன் அவர்கள் தொடர் பேச்சில் ஈடுபட்டிருந்தனர். இந்தச் சந்திப்பின் பின்னணி யில் சந்திரிகாவே செயற்பட்டிருந்தார்.

இரு தரப்பிற்குமிடையிலான இணக்கப் பாடு எட்டப்பட்டதை தொடர்ந்து, அடுத்த சில தினங்களில் ஐந்து எம்.பிக்களும் சஜித்திற்குப் பகிரங்க ஆதரவு தெரிவிக்கவுள்ளனர்.

இதேவேளை, கட்சியின் இரண்டாம் மட்ட தலைவர்களான – தொகுதி அமைப்பாளர்களில் கணிசமானவர்களும், பெரமுனவுக்கான ஆதரவை விரும்பவில்லை. பெரமுனவை ஆதரிக்கும் முடிவை எடுப்பதற்கு முன்னர் தொகுதி அமைப்பாளர்களை அழைத்த ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன, இரகசியக் கருத் துக்கணிப்பொன்றை நடத்தியிருந்தார். அனைத்து தொகுதி அமைப்பாளர்களிடமும் படிவமொன்றை வழங்கி, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அவர்களின் நிலைப்பாட்டை குறிப்பிடும்படி கேட்கப்பட்டிருந்தது.

அநேகமாக தொகுதி அமைப்பாளர்கள், சு.க தனித்து செயற்பட வேண்டுமென்றே குறிப் பிட்டதாக தெரிவிக்கின்றனர்.

இதனால் அதிருப்தியடைந்துள்ள தொகுதி அமைப்பாளர்கள் இரண்டு அணியாகச் செயற்பட்டு வருகிறார்கள். அதிருப்தியாளர் களை வளைத்துப் போட ஐ.தே.க முயன்று வரும் நிலையில், எஞசியவர்கள் தனித்துச் செயற்பட்டு சு.கவை கைப்பற்றும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

பெரமுனவை ஆதரிப்பதென்ற முடிவை எடுத்திருந்தாலும், வரும் நாள்களில் சு.கவிற்குள் பெரும் பிரளயம் நிகழ வாய்ப்பிருக்கிறது என அரசியல் அவதானிகள் கூறியுள்ளனர். (ஐ)

## காத்தான்குடி கடற்கரையில் ஆணின் சடலம் ஒன்று மீட்பு

மட்டக்களப்பு, ஒக். 13

மட்டக்களப்பு – காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடற்கரை யில், ஆணின் சடலமொன்று கண் டெடுக்கப்பட்டுள்ளது.

புதிய காத்தான்குடி ஆறாம் குறிச் சியிலுள்ள கடற்பகுதியில் மிதந்து வந்த சடலமொன்றை நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை பொலிஸார், பொதுமக்களின் உதவியுடன் கரைக்குக் கொண்டு வந்தனர்.

இந்தச் சடலம் தற்போது மட்டக் களப்பு போதனா வைத்தியசாலை யில் வைக்கப்பட்டுள்ளது.

45 அல்லது 50 வயது மதிக்கத்த இந்த ஆணின் சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. இதுதொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின் றனர். (ஐ)







யாழ்ப்பாணம், ஒக். 13

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நவீன சி.ரி. ஸ்கானர் சேவையை நேற்று சனிக்கிழமை இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினரு மான மாவை சேனாதிராசா வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு பொ.றஞ் சன் எஸ்.கதிர்காமநாதன் பி.நந்தபாலன் மற்றும் சமூக ஆர்வலர்களின் நிதிப் பங்க ளிப்பு மூலம் வழங்கப்பட்ட நவீன சி.ரி.ஸ்கானர் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

போதனா வைத்தியசாலை யின் பணிப்பாளர் த.சத்திய மூர்த்தி தலைமையில் காலை 8.30 இற்கு இந் நிகழ்வு இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் நாடாளு மன்ற உறுப்பினர் சரவணப வன், வடக்கு மாகாண சபை யின் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராசா, வைத் தியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கோட்டாபய வழக்கை விசாரிக்க தடை நீடிப்பு!

டீ.ஏ. ராஜபக்ஷ ஞாபகார்த்த கோபுரம் மற்றும் நூதனசாலை நிர்மாண பணி களுக்காக 3 கோடி 39 இலட்சம் ரூபா அரச பணத்தை தவறாக பயன்படுத்தி யமை உள்ளிட்ட 7 குற்றச்சாட்டுக்க ளின் கீழ் முன்னாள் பாதுகாப்புச் செய லாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக, மூவரடங்கிய விசேட மேல் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணையைத் தற்காலிக மாக இடைநிறுத்தி பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவை எதிர் வரும் டிசம்பர் 20ஆம் திகதி வரை நீடித்து உயர்நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷவினால் தாக் கல் செய்யப்பட்டுள்ள விடே மேன்முறை யீட்டு மனு, உயர் நீதிமன்ற நீதியர சர்களான எல்.டி.பி.தெஹிதெனிய, எஸ். துரைராஜா மற்றும் காமினி அமரசேகர ஆகிய உயர் நீதிமன்ற நீதி யரசர்கள் முன்னிலையில் நேற்று முன் தினம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

முன்னதாக இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத் துக்கு சொந்தமான 3 கோடி 39 இலட்சம் ரூபா பணத்தை நம்பிக்கை மோசடி செய்தமை தொடர்பில் முன்னாள் பாது காப்புச் செயலாளர் கோட்டாபய உள் ளிட்ட 7 பிரதிவாதிகளுக்கு எதிராகச் சட்ட மா அதிபர் நிரந்தர விசேட மேல் நீதிமன்றில் வழக்குத் தொடுத்தது. (ஐ)



வடமேல் மாகாண ஆளுநர் பேசல ஜயரத்ன பண்டாரவை வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் சம்பிரதாயபூர்வமாக நேற்றுமுன்தினம் ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்தார்.



# பருப்புச்சட்டி

**முத்தையா சிவனேசன் (நயினாதீவு இலங்கை)**
Scarborough, Canada



முப்பது வருசம் எண்டா கொஞ்சக் காலமே எத் தின மாற்றங்கள், எல்லாமே புதுசு புதுசாய்த் தான் இருக்கு ஊரும் மாறிப் போயிற்று ஆக்களும் தான். என்ன அம்மம்மா பழைய ஞாபகங்கள் வந்திட்டுப் போல இருக்கு, இறங்கிற இடம் வந்திட்டு என்ர பேர னின் குரல் கேட்டு திரும்பிப் பார்க்கிறேன். அவன் சின்னப்பொடியன் இடம்வலம் தெரியாது ஏதோ கூவுல் படத்தில பாத்துத் தான் சொல்லுறான் அந்த நாடுகளில இப்படித்தானே போனில பாத்தண்டு தெரியாத இடமெல்லாம் போய்வருங்கள்.

அட நம்மட சங்கக் கடைச் சந்தி, அந்த மதவடி, கிழக்கு மூலையில இருந்த வெறுங் காணி முந்தி வேலியும் இல்லாமக் கிடந்தது சின்னையா குஞ்சிக்குத்தான் செஜுந்தம் அவர்க்குத்தான் பிள்ளையள் இல்லையே வளர்ப்புப் பொடியனின்ர பொடியள் ரெண்டும் கனடாவில தான் இருக்க வேணும் அதுகள் தான் காசனுப்பி மதில் கட்டப்பட்டதோ அல்லது ஆருக்கும் கைமாறிப் போயிட்டுதோ தெரியேல்ல? சந்தியில இறங்கி ரெண்டுநட நடக்க தெற்குப்பக்கத்தில பள்ளிக்கூடம் மதில் கரையோட இருந்த விஞ் ஞான ஆய்வுகூடம் பள்ளிக்கூடத்தில முந்திப்படிச்ச கனடாவில இருக்கிற பழையமாணவர்களால திருத் தப்பட்டிருக்கு முகப்பில பெரிய எழுத்தில எழுதிப் போட்டிருக்கினம் அதுக்கே கனகாசு முடிஞ்சிருக்கும் காசு குடுக்கிறவ இதுகள எதிர்பாப்பினம் தானே? பள்ளிக்கூடத்துக்கு வடக்கால பிள்ளையார் கோவில் வயலுக்கால நடந்து கந்தசாமி அண்ணற்ற வீட்டுக் குப் பின்பக்க ஒழுங்கையில ஏறி ரெண்டு முடக்குத் திரும்ப வீடு வந்திடும், எனக்குள்ளே நினைத்துக் கொள்கிறேன்.

மூன்று வருஷத்துக்கு முன்னுக்குத் தான் மகளும் மருமகனும் வந்து விடு வாசலயெல்லாம் திருத்திப் போட்டுப் போனவை எனக்கு முழங்கால்ல ஒப்பரேசன் செய்திருந்ததால என்னால அப்ப வரமுடியேல்ல மாமி உங்கள ஒவ்வொரு வருஷமும் ஊர்க் கோயில்த் திருவிழாக்குக் கூட்டிக்கொண்டு போவன் எண்டு என்ர மருமகன் ஓரே சொல்லிக்கொண்டிருந்தவர். நம்ம விட்டில போய் அம்மாட கையால அங்க இருக்கிற பருப்புச்சட்டியில ஒரு நல்ல பருப்புக்கறி வைச்சு எல்லாரும் சாப்பிடவேணும்எண்டு என்ர மகள் ஒரே சொல்லிக்கொண்டிருந்தவள். அங்க கனடாவில ஊரில மாதிரி சந்திக்குச் சந்தி சாப்பாட்டுக் கடைகள் இருக்கு எல்லாக் கடையிலையும் எந்த நேரமும் சனமாய்த்தான் இருக்கும்.

வேலை வெட்டி எண்டு ஓடித்திரியிறதில வீடு வாசல்ல இருந்து சமைக்க ஆருக்கு எங்க நேரம் இருக்கு. மருமகனுக்கும் என்ர பருப்புக்கறி எண்டா நல்ல விருப்பம் சைவச் சாப்பாட்டக்கு அந்த ஒரு கறியே காணுமெண்டு அடிக்கடி சொல்லுவார். ஆரு கண்ணூறு பாத்திச்சினமோ தெரியெல்ல சும்மா ஓடித்திரிஞ்ச மனுசன்வேலைக்குப் போயிட்டு வந்து கொஞ்சம் களைப்பா இருக்கெண்டு செற்றியில குந்தினவர்தான்;, நானும் உடன சூடா நெஸ்ட மோல்ட் கரைச்சு குடிக்கக் குடுத்தன், ரெண்டு மிடறு குடிச்சிட்டு அப்பிடியே கதிரையில சாஞ்சவர்தான் எழும்பேல்ல. அம்பிலன்சில வந்து வெள்ளக் காரன்கள் எத்தன வைத்தியம்தான் செய்து பாத்தாங்கள் அவர எழப்ப முடியேல்ல ஏதோ காடியோ அரஸ்டாம் அந்த இடத்திலயே உயிர் பிரிஞ்சிட்டு.

இப்பதான் எத்தின புதுப் புது வருத்தங்கள். சீவன் போகேக்க பாவம் பிள்ளயும் பக்கத்தில நிக்கேல்ல, கேள்விப்பட்டு வேல இடத்தில இருந்து ஓடி வந்தவள் மனுசன் கிடக்கிற நிலையப் பாத்து பதறிப்போனாள். மூண்டு மாதமா வீடே இருண்ட மாதிரிக்கிடந்தது பிள்ளையும் அதோட வேலைய விட்டிட்டாள், பொடி யளும் வளந்திட்டுதுகள் தானே. மூத்தவன் கலி யாணம் முடிச்சு மூண்டு வயசில ஒரு சின்னக்குட்டி யும் இருக்கு, அவயளோடதான் இப்ப நான் ஊருக்கு வந்தனான். மருமகன் எல்லாருக்கம் சேர்த்து எனக்கும் சில்லுப்போட்ட கதிரையோட சேர்ந்து போகக்கூடிய மாதிரி ஆறு மாசத்துக்கு முன்னே பதிஞ்சு விட்டிருந்தவர். நீங்க முன்னுக்குப் போங்க நாங்க பின்னுக்கு வாறமெண்டு சொன்னதுகள் தான் எங்க வந்தது எல்லாமே தலைகீழாய் மாறிப் போயிற்றே.

ஓல்ட் கிராண்ட்மா, பேரன்ர சின்னன் எனக்கு வச்சிருக்கிற பெயர் அதுதான்,'கிளவு கழட்டு கொட் இருக்கு' அதுக்கு தெரிஞ்ச தமிழில என்ர கையில போட்டிருக்கிறதக் கழட்டுவெக்கையாக இருக்கும் எண்டுசொல்லுது எண்டது மட்டும் விளங்குது. மூன்றாவது தலைமுறையில உள்ளதுகள் இந்தளவு தமிழ் கதைக்கிறதே பெரிய விசயம். அங்க கனடாவில சிலர் தமிழ் நல்லாத் தெரிஞ்சிருந்தும் தமிழ மறந்துபோய் ஆங்கிலத்தில எல்லோ பிள்ளையளோட வீட்டிலையும் கதைக்கினம். நம்மட சொந்த மொழியைக் கதைக்கிறதுக்கு ஏன் தான் பஞ்சிப்படினமோ தெரியேல்ல. நம்மட நாட்டிலதான் ஒரு காலத்தில நெத்தியில இருந்த பொட்டையும் அழிச்சுப் போட்டு வாயையும் மூடிக்கொண்டு ஆரெ வர் எண்டு தெரியாம இருக்கட்டும் எண்டு நடமாடித் திரிஞ்சனாங்கஅந்த நாட்டில தான் எந்த மொழியைக் கதைக்கிறதுக்கும் எந்த கலாசாரங்களைப் பின்பற்றிறதுக்கும் நல்ல வசதியம் சுதந்திரமும் இருக்கே பிறகேன் தான் பயப்பிடுவான்.

கனடாவில பயணம் வெளிக்கிடேக்க போத்துக் கட்டினது, பிளேன் எறி வந்து கொழும்பில இறங்கி, ரெயிலேறி வந்து யாழ்ப்பாணத்தில இறங்கி, வஸ்சில ஏறி, வள்ளத்தில ஏறி பிறகு உள்ளுக்குள்ள ஓடித்திரியிற வஸ்சிலயும் ஏறி வீட்டுக்குக் கிட்ட வந்திறங் கியாச்சு இனி நடக்கிற தூரம் தான் வீடு வந்திடும். வீட்டில போய்த்தான் எல்லாத்தையும் கழட்டி எறியவேணும் செருப்பும் போடாம எல்லோ ஊரில திரியிறது.

குளிர்ப்பெட்டிக்குள்ள குந்திக்கொண்டு இருக்கிற மாதிரியெல்லோ அந்த நாட்டில இருக்கிறது. அங்க இருக்கிறகைக்கு பழகிப்போட்டுது, எங்க பழகிறது உடம்பு முழுக்க போர்த்துக் கட்டிக் கொண்டு நடமாடித்திரியுதுகள். ஆனாலும் சும்மா சொல்லக் கூடாது அந்த நாட்டில எல்லா வசதியும் இருக்கு,கஷ் டம் கரைச்சல் எண்டு சொல்லிறதுக்கு ஒண்டுமில்ல படிக்கிறதக்கு வேலை செய்யிறதுக்கு எல்லாத்துக் கும் நல்ல வாய்ப்புக்கள் இருக்கு வேலை செய்ய முடியாதவைக்கும் அரசாங்கம் காசு குடுக்கும். வயதுபோனவைக்கு எண்டு தனி மரியாதை,வைத்திய வசதி போக்குவரத்து எண்டு எல்லாமே இலவசம், அதோட சும்மா வீட்டில இருக்கிற எங்கள மாதிரி ஆக்களுக்கும் அரசாங்கத் திட்ட இருந்து காசு வேற கிடைக்கது.

வயலத்தாண்டி ஓழுங்கையில காலடி வைக்கிறம் வண்டிக்கார நாமுத்தர் வீட்டு முடக்கடியில நீட்டிக் கொண்டிருந்த கல்லைக் காணேல்ல? எத்தின தடவை அந்தக் கல்லு என்ர காலப் பெயர்த்திருக்கும் ஒருக்கா ஞாபகமிருக்கு பெருவிரல் நிகமெல்லாம் பிய்ந்துபோய்க்ரெத்தம் கொட்டெண்டு கொட்டி கந்தசாமி அண்ணர் வீட்டுக் கிணற்றடில போய்க் காலைக் கழுவி பிறகு அண்ணற்ற ஆச்சியெல்லோ ஏதோ கை வைத்தியம் செய்து துணியால சுத்திக் கட்டிவிட்டது பாவம் மனிசி,வண்டலுகள் ஓடி இந்த ஒழுங்கையெல்லாம் நாசமாய்ப் போச்சு எண்டு மனிசி அப்ப சொன்னது இன்னும் ஞாபகமிருக்கு அது மனிசியின்ர ஆதங்கம் மட்டுமல்ல அதோட பக்கத்து வீட்டு வண்டிக்கார நாமுத்தர் வீட்டோட அவைக்கு நெடுநாள் குடும்பப் பகை. கல்லொழுங் கயுளுக்கெல்லாம் இப்ப தட்டிப்பரப்பி தாரும் போட்டிட்டாங்கள், சின்னன் தன்ர சில்லுப்போட்ட பாக்கையும் இழுத்துக் கொண்டு வருதெண்டா பிற கென்ன.

இராசமணியண்ணர் வீடு அமிர்தலிங்கண்ணர் வீடு ஆக்கள் ஒருத்தரும் இல்லாம அழிஞ்சுபோய் கிடக்கு. பக்கத்து வீட்டு பரமத்தான் வீட்டில ஆரோ தெரிஞ்ச சனத்தை இருத்தி இருக்கிறதால வீடு வாசல் பரவாயில்லாமக் கிடக்கு. முன் வீட்டு கணபதியக்கா வீட்டில அவேட ரெண்டாவது மகன் வெளிநாட்டு வாழ்க்கை வேணாம் எண்டு விட்டெறிஞ்சு போட்டு புதுசா எல்லா வசதியளோட வீடொண்டும் கட்டி பிள்ளையளையும் படிப்பிச்சுக்கொண்டு ஊரோட இருக்கிறான். வீடும் பாக்க பளிச்செண்டிருக்கு காணி எல்லாம் சோலை மாதிரியெல்லோ இருக்கு அங்க போய்த்தான் நம்மட வீட்டுத் திறப்பை வாங்க வேணும்.

நம்மட வீட்டு வெளிவளவில சாய்ந்துபோய் நிண்ட வேப்பம் மரம் இலை கொட்டிக்கிடக்கு அந்த மரத்தைப் பாக்கிற நேரமெல்லாம் என்ர கடைக் குட்டியின்ர ஞாபகந்தான் வரும். ஒரு நாளைக்கு எத்தின தரம் இந்த வேப்ப மரத்தில ஏறி விளையாடுவான். இந்த வட்டாரத்துப் பொடியள் எல்லாம் வந்து நிண்டு கூத்தாடுங்கள்.

அதுகள் விளையாடாத விளையாட்டா பந்தடி, கிட்டிப்புல்லு, கிளித்தட்டு, ஒளிச்சுப்பிடிச்சு எண்டு எத்தின விளையாட்டுக்கள தான் விளையாடுங்கள். அதோட கோயில் கொடியேறிப்போட்டா வீட்டி லை யும் கோயில்கட்டி பூவரசம் இலையில பீப்பி செய்து மாப்பேணி மூடியை கழட்டி கடதாசி மட்டை வைச்சுக் கட்டி மேளம் செய்து எல்லாப் பொடியளும் சேர்ந்து அடிச்சுக்கொண்டும் ஊதிக்கொண்டும் திரியுங்கள். ஆறாம் வகுப்புக்கு படிக்கிறதக்கு பெரிய பள்ளிக் கூடத்துக்கு எடுபட்டு போகேக்க ஓரே அழுதுகொண்டு இருந்தவன் இன்னும் ஞாபகமிருக்கு கடைக் குட்டியல்லே ஓரே என்ர சீலையில பிடிச்சண்டு திரியிறவன் விட்டுப்பிரியிறதெண்டா கவலையாய் தானே இருக்கும்.

இவனோட சேர்ந்து இன்னும் மூண்டு பொடியளுமாய் விடுதியில இருந்து தான் படிச்சவங்கள் நல்லா படிச்சதுகள் பொடியள் மூன்று வருஷம் பட்டினத்தில இருந்து படிச்சவங்கள் மூன்று மாதத்திற்கொருக்காய் விடுமுறை விடேக்க ஓடி வந்து வீட்டில வந்து நிற்பான் மற்றும்படி பள்ளிக்கூடமும் படிப்பும் எண்டு தான் திரிஞ்சவன் குழப்படியில்ல நாசமாய்போவான்கள் எங்க கிடந்து வந்தாங்களோ தெரியேல்ல எங்கட நாட்டுப் படைதான் எங்களுக்கு எதிரியாப் போச்சே தங்களில்ல ஆரேனும் செத்தப்போயிட்டா காயப் பட்டுப் போட்டா சமப்படுத்திறதுக்கு நம்மட பொடியளப்பிடிச்ச சரிக்கட்டிப் போடுவாங்கள்.

இப்பிடித்தான் பாலத்தடியில ஏதோ குண்டு வெடிச்சதாம் இராணுவத்தில பத்துப் பேர் பலியெண்டோண்ண பள்ளிக்கூட லீவுக்கு வழமை போல விட்டுக்கு வந்த பொடியனப் பிடிச்சிட்டாங்கள் வாகனத்தில இருந்து இறக்கி ஒரு பத்துப் பதினைஞ்சு பேரை கூட்டிக்கொண்டு போனவங்களாம் வாகனத்தில வந்தவ சொல்லிச்சினம் இண்டவரைக்கும் என்ன ஆனது பொடியனுக்கு எண்டு தெரியாது. நானும் தேடாத இடமில்ல பாக்காத ஆக்களில்ல எல்லாரும் கைய விரிச்சுப்போட்டாங்கள்.

பொடியன் இல்லாம வீடே சூனியமாயிருந்தது. பொடியனப்பிரிஞ்ச கவலை என்ர மனிசனையும் வருத்தக்காரனாக்கிப்போட்டுது. அவரும் கனகாலம் இருக்கேல்ல அடுத்த வருஷ கோயில் திருவிழாக்கு இரண்டு நாளைக்கு முதல் அவரும் மண்டையப் போட்டிட்டார். இந்தத் திருவிழா வந்தா முப்பத்தைந்து வருஷமாகுது.

என்னதான் வசதியிருந்தாலும் உலகத்தைச் சுத்தி வந்தாலும் நம்மட வீட்டில வந்திருந்து கையைக்கால நீட்டி ஒரு செம்பு தண்ணிய அள்ளிக் குடிக்கேக்க இருக்கிற சந்தோசம் வேற எதிலையும் இல்ல. எவ்வளவு கலகலப்பாய் இருந்த ஊர் அக்கம் பக்கம் எல்லாம் மாறிப்போச்சு. நம்மட வயதில இருக்கிறவைய இப்ப விரல்விட்டு எண்ணலாம். சின்னனில சாப்பிட்ட ஊர்ச் சாப் பாடும் கனடா வைத் தியமும் தான் இன்னமும் நடமாடித்திரிய வச்சிருக்கு. அதுசரி நேரம் காலம் வந்தா எல்லாரும் போகவேண்டியதுதான் ஓருத்தரும் வீரம் பேசேலாது அதுக்குள்ள நீ பெரிசு நான் பெரிசு எண்டு எத்தின விதமான சனங்கள்.

(15 ஆம் பக்கம் பார்க்க)



கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்

(சென்றவாரத்தொடர்ச்சி)

# நீதித் தராசில் கூட்டமைப்பு




மறுபக்கப்பார்வையும் உண்டு. சம்பந்தனைப்பொறுத்தவரை, அவரின் அரசியல் அனுபவம் நாடாளுமன்றில் அவரது ஆளுமைமிக்க உரைகள், பேரினத்தாராலும் மதிக்கப் படும் தன்மை, வெளிநாட்டுத் தலைவர்களின் மரியாதையைப் பெறும் தகுதி, அவருக்கு ஒப்பான ஒரு தலைவர் கட்சிக்குள் இல்லாமை என்பவை பற்றியும் சுமந்திரனைப் பொறுத்த வரை, கட்சியில் அவருக்கு நிகரான தகுதிகொண்டோர்தம் இருப்பின்மை. இனப் பிரச்சினையை நிதானமாய் எதிர்கொள்ளும் அவரது ஆற்றல்.

உலகத் தலைவர்களின் அவருக்கான அங்கீகாரம். இலங்கை மத்தியஅரசின் செயற் பாடுகளில் அவர் காட்டும் ஆளுமை. இலங்கை அரசியல் சார்பானதும் தமிழ்மக்கள் சார்பானது மான சட்ட நடவடிக்கைகளில் அவரது திறமை. என்பவை பற்றியும் ஆராய்தல் அவசியமாகிறது. அவற்றை அடுத்தவாரம் ஆராய்வோம்.

உதயமான தமிழ்மக்கள் பேரவையின் வளர்ச்சியில், தமிழர் கூட்டமைப்பு சற்றுத் தளர்ந்தது உண்மையேயாம்.

இதுநாள் வரை கூட்டமைப்பில் ஆட்சி செய்த, தமிழரசுக்கட்சியினருக்கு சவால்விட முடியாது தளர்ந்து நின்ற, மாற்றணியினர், பேரவையின் உதயத்தோடு, சற்றுத் தலை நிமிர்ந்தது பற்றி முன்னரே சொல்லியிருக்கிறேன்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வெளியேற்றம், தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த அருந்தவபாலன் அவர்களின் வெளி யேற்றம், பேராசிரியர் சிற்றம்பலம் அவர்களின் தடுமாற்றம் என, பின்னாளில் கூட்டமைப்பில் ஏற்பட்ட விரிசல்கள் பலப்பல. மாணவர் பலத்தோடு நின்ற கஜேந்திரகுமாரும், சில பத்திரிகையாளர்களும் ஒரு சில சமூகப் பிரமுகர்க ளும், முதலமைச்சரோடு தமிழ்மக்கள் பேரவை யில் கைகோர்க்க, இன்று அவர்தம் பலம் பெரிய அளவில் இல்லாவிட்டாலும், முன்பிருந்ததை விட தலை தூக்கியிருப்பது உண்மையேயாம்.

இவை கட்சிகளின் பலம் பற்றிய செய்தி



கள். அதுபற்றி நாம் அதிகம் கவலைப்படத் தேவையில்லை. ஆனால் அக்கட்சிகளுக்கி டையேயான பலப்பரீட்சையில்,நம் தமிழினம்; பிளவுபடத் தொடங்கியிருப்பதே கவலை தரும் விடயமாகிறது.

தமிழினத்தின் ஏகத்தலைமை என கோஷமிட்டு, அக்கொள்கையைச் சாத்தியப்படுத்தி வெற்றி கண்ட சம்பந்தன் அவர்களே, இவ் இனப்பிளவுக்கான மொத்தப் பொறுப்பினையும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

இனப்பற்றைக் கடந்த கட்சிப்பற்று, ஆளு மையற்ற தலைமைச் செயற்பாடு, ஜனநாயகமற்ற கட்சி வழிநடத்தல்,பிரச்சினைகளை நேர்மையாய் எதிர்கொள்ளும் வலிமையின்மை, முடிவுகளை எடுப்பதில் தீர்க்கதரிசனமின்மை, பொய்மைகளால் மக்களை ஏமாற்றும் இயல்பு என, சம்பந்தர்மீதான குறைபாடுகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

இனத் தலைவராய் மட்டுமன்றி, எதிர்க்கட் சித் தலைவராயும் அவர் சரிவரச் செயற்பட வில்லை என்பதற்கு, நாடாளுமன்றத்திற்கு வந்த வங்கி ஊழல் பற்றி, அவர் கடைசிவரை வாய் திறவாமல் இருந்ததுவே சாட்சியாம்.

இங்ஙனமாய் அவரது இறுக்கமில்லாத தலைமைத்துவமே, மேற்சொன்ன இனப்பிளவுக்கு வித்திட்டிருக்கிறது என்பது உண்மை.

பெயரளவுக்குத் தான் தலைவராய் இருந்துகொண்டு, தலைமைக் கடமைகளையெல்லாம், வேறொருவரிடம் விட்டுவிட்டு இருப்ப தும், கட்சிக்குள் குழப்பங்கள் நிகழ்கிறபொழுது, பிழை செய்தவர்களைத் தட்டிக்கேட்டுத் தண்டிக்கத் தெரியாதிருப்பதுவும், இன வளர்ச்சியை விட கட்சி வளர்ச்சிக்கு அதிமுக்கியத்துவம் கொடுப்பதுவுமே, அவரது கட்சியினதும் இனத்தினதும் இன்றைய தளர்வுகளுக்கு, அடிப்படைக் காரணம் என்பதில் ஐயமில்லை.

வெளிப்பட உண்மையைச் சொல்லவேண்டுமானால், இன்றைய நிலையில், கூட்டமைப்பின் எழுதப்படாத தலைவராய் சுமந்திரனே இயங்கி வருகிறார் என்பது வெளிப்படை.

அதன் பொருத்தப்பாடு வேறுவிடயம். ஆனால், பல நேரங்களில் சுமந்திரனை முழு அதிகாரத்தோடு இயங்கவிட்டுவிட்டு, இக்கட்டுகள் வரும்போது கைவிரித்து நிற்கும் சம்பந்தனாரின் நிலை ரசிக்கத்தக்க ஒன்றல்லவாம்.

கூட்டமைப்புக்குள்ளும் சரி தமிழரசுக் கட்சிக்குள்ளும் சரி, சுமந்திரனின் தன்னிச்சை யான செயற்பாடுகள் பலரால் ரசிக்கப்படவில்லை என்பது சர்வநிச்சயம். சிறிது கூட ஜனநாயகத் தன்மையின்றி, தனியொருவராய் இயங்க நினைக்கும் சுமந்திரனின் போக்கு, நிச்சயம் தமிழினத்திற்கு நன்மை செய்யப்போவதில்லை.

பதவியூடு அவருக்கான அதிகாரத்தை வழங்கவும் விரும்பாமல்,அதே நேரத்தில் அவரைக் கட்டுப்படுத்தவும் தெரியாமல், ஜனநாயகத் தன்மையின்றி இஷ்டப்படி சுமந்திரனை இயங்கவிடும் சம்பந்தனாரின் போக்கும், வரவேற்கத்தக்க ஒன்றல்லவாம்.

முதுமையின் இயலாமைதான் சம்பந்தரின் இப்போக்குக்குக் காரணம் என்றால், அவ் உண்மையை மக்கள் மன்றில் வெளிப்பட உரைத்து, தலைமையிலிருந்து தான் விலகி, சுமந்திரனைத் தனது பதவியில் உலகறிய அவர் உட்கார வைக்கலாம்.

கூட்டமைப்பில், பெயருக்குச் சம்பந்தன் தலைமை தாங்க, முழுக்க முழுக்க முடிவுகள் எடுக்கும் வேலையையும்,அதை நடைமுறைப் படுத்தும் வேலையையும் சுமந்திரனே செய்வது, தேவையற்ற சர்ச்சைகள் உருவாகக் காரணமாய் இருக்கிறது.

இதைவிட தன்னை கட்சியில் ஓர் ஆலோசக நிலையில் ஆக்கிக் கொண்டு, வெளிப்பட்ட தலைவராக சுமந்திரனை ஆக்குவது,பல சர்ச்சைகளைத் தவிர்க்கும் என்பது நிச்சயம்.

அங்ஙனம் செய்தால் கூட்டமைப்புக்குள் ஜனநாயகத் தன்மையாவது மிச்சப்படும். கூட்டமைப்பு என்பதைவிட்டு தமிழரசுக்கட்சி என்று பார்த்தாலும் கூட, சுமந்திரனுக்கு இம் முதலிடம் வருவதுக்காம் காரணம் என்ன? என்றும், அத்தகுதி அவருக்கு வழங்கப்படு வதன் நியாயம் என்ன? என்றும், கட்சிக்குள் ளேயே பலரது மனதில் கேள்விகள் விஸ்வரூபம் எடுத்து நிற்கின்றன.

வெளியில் கேட்டால் எங்கே தாமும் ஒதுக்கப்படலாம் எனும் அச்சத்தில்,பலரும் மனம் குமைந்தபடி மௌனித்து இருப்பது வெளிப்படை. என்ன அடிப்படையில் சம்பந்தனார் பதவிப் பரிசுகளையும், அதிகார விநியோகத் தையும் செய்கிறார் என்று எவருக்கும் புரிய வில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணியில், அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் ஆகியோர் முன்னணியில் இருந்த காலத்தில்,நான்காம், ஐந்தாம் இடத் தலைவராக பலருக்குப் பின்னால் இருந்த சம்பந்தர்,காலத்தின் கோலத்தால் திடீரெனத் தமிழினத்தின் தலைவரானார். தொடர்ந்த அவரது அதிர்ஷ்டத்தால் சிலகாலங்களிலேயே, இலங்கை அரசின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் அவரைத் தேடி வந்தது.

ஆனால் அந்தத் தலைமைக் கடமைகளை, அவர் செம்மையுற நிறைவேற்றினாரா? எனும் கேள்விக்கு,'ஆம்' எனும் பதிலை எவராலும் மகிழ்வோடு சொல்ல முடியாது.

இதுபோலத்தான் சுமந்திரனிலும் எதிரிக ளால் மட்டுமன்றி, நடுநிலையாளர்களாலும் கூட சில குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. மற்றவர்களை மதிக்கத் தெரியாத தன்மை. மக்கள் மனமறிந்து பேசத் தெரியாத தன்மை.

தான் எட்ட நினைக்கும் முடிவுகளையும் அதற்காகத் தான் திட்டமிட்டிருக்கும் பாதையையும் மக்கள் மன்றில் சரிவர எடுத்தியம்பி அவர் தம் ஆதரவைப் பெறாமல் இயங்கும் தன்மை. தகுதி உள்ளவர்களைக் கட்சிக்குள் இணைத்துக் கொள்ளாத குறைபாடு.

தனது தனிப்பட்ட ஆதரவாளர்களைக் கட்சி வரலாற்றை மறந்து முதன்மைப்படுத்தும் தவறு. தன்னுடைய 'சீனியர்களின்' அபிப்பிராயம் பெறாமல் நடக்கும் போக்கு. ஊடகங்களின் ஆதரவுகளை இழந்து நிற்கும் நிலை. அவர்மேல் சுமத்தப்படும் சமயச் சார்பின் நிழல்.

மக்கள் தலைவனாய் அன்றி சட்டத்தரணியாய் மட்டும் தன் சாதனை களை நிலைநிறுத்தி கட்சியை வளர்க்க நினைக்கும் இயல்பு. ஆற்றலில்லாதவர்களால் கட்சியை நிரப்பி தனி ஒருவராய்த் தன் ஆற்றல் காட்டி தனது முக்கியத்துவத்தை உணர்த்த நினைக்கும் செயற்பாடு என இக்குற்றச்சாட்டுகளின் பட்டியல் நீள்கிறது.

இன்றைய நிலையில், கட்சிக்குள் சுமந்திரனின் அவசியத்தை அனைவரும் உணர்ந்தாலும், மேற் சொன்னதான விடயங்களால், அவர் பலரதும் எதிர்ப்பையும் சம்பாதித்து நிற்கிறார் என்பது மறுக்கமுடியாத உண்மையாம்.

நாட்டின் அண்மைக்கால செயற்பாடுகளில், சுமந்திரனின் அறிவு சார்ந்த நகர்வுகள் பலராலும் கவனிக்கப்பட்டன. ஜனாதிபதியின் நாடாளுமன்றக் கலைப்புக்கு எதிராய் அவர் நீதிமன்றத்தில் காட்டிய ஆற்றல், கிண்ணியா போன்ற இடங்களில் தொல்பொருளாளர்களால் தமிழர்களின்



உரிமைமீது தொடுக்கப்பட்ட, மறைமுகப் போருக்கு எதிரான அவரின் நீதி சார்ந்த செயற்பாடு, சுயாட்சி உரிமை பற்றிய நீதிமன்றத் தீர்ப்பில் அவர்காட்டிய ஆளுமை என,பல விடயங்களில் அவர் செய்த சாதனைகளை யாரும் மறுக்கமுடியாது என்பது உண்மையே.

இங்ஙனமாய் அவர் பெற்ற வெற்றிகள், அவரின் சட்ட அறிவுக்காம் சான்றுகளாய்த் திகழ்கின்றன. அதில் சந்தேகமில்லை. ஆனால் இச்சாதனைகள் அவரை ஓர் சட்டவல்லுநராய் நிரூபித்திருக்கின்றனவேயன்றி, அவரை ஒரு மக்கள் தலைவனாய் நிரூபித்ததாய்ச் சொல்ல முடியாது.

தன் அறிவுச் சக்தியை வைத்தே மேற் சொன்ன விடயங்களை அவர் சாதித்திருக்கிறார். மக்கள் சக்தியை வைத்து அவர் சாதித்த விடயங்கள் மிகமிகக் குறைவுதான். மேல் விடயங்களால் ஓர் வக்கீலாய் வெற்றி பெற்றிருக்கும் சுமந்திரன், அவற்றைக் கடந்து ஒரு மக்கள் தலைவனாய்ச் சாதிக்கவேண்டிய விடயங்கள், வரிசையில் காத்திருக்கின்றன.

## தாழ்மையும் ஏழ்மையும் நிறைந்த தூதுரைப் பணியாளர்களாக

இத்தாலியின் மார்க்கே மாநில கப்புச்சின் சபையின் 73 துறவிகளைச் சந்தித்த திருத்தந்தை பிரான்சிஸ் இறையழைத்தல்கள், ஏழ்மை, மன்னிப்பு, தூதுரைப் பணி ஆகிய தலைப்புக்களில் தன் எண்ணங்களைப் பகிர்ந்துகொண்டார். ஓர் அர்ப்பணிக்கப்பட்ட துறவி தன் வாழ்வில் கடவுள் தலையிடவும் அவரால் கேள்வி கேட்கப்படவும் அனுமதியாமல் இருப்பது, அவர் துறவு வாழ்வில் மகிழ்வற்று இருப்பதை வெளிப்படுத்துகின்றது என்றார்.

காலைக்கதிர் Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## சாட்சிய வாழ்வு வாழ்வது பற்றிச் சிந்திக்க வேண்டும்

அர்ப்பணிக்கப்பட்ட துறவியர் தங்களைப் பற்றி நினைக்காமல் சாட்சிய வாழ்வு வாழ்வது பற்றிச் சிந்திக்க வேண்டும். அசிசி நகர் புனித பிரான்சிஸ் அடிகளார் பரிந்துரைத்துள்ளது போன்று மத மாற்றத்தில் ஈடுபடாமல் வார்த்தைகளைவிட வாழ்வால் இயேசுவைப் போதிக்குமாறு கேட்டுக்கொண்ட திருத்தந்தை கப்புச்சின் துறவியர் தாழ்மையோடு மட்டுமல்லாமல், நடைமுறையில்வாழப்படும்ஏழ்மை நிலையோடும் சாட்சி பகருமாறு பரிந்துரைத்தார்.

# நீங்கள் திருமுழுக்குப் பெற்று அனுப்பப்பட்டவர்கள்

## ஒக்டோபர் 2019 மறைபரப்புக்கான சிறப்பு மாத சிந்தனை

திருத்தந்தை பிரான்சீஸ் அவர்கள் பரிந்துரைத்துள்ள ஒக்ரோபர் மாதத்திற்கான நாற்கோண பரிணாம வடிவ செயற்பாடுகள். இவ்வாரத்தின் கருப்பொருளாக மறைபரப்புக்கான பிறர் அன்புப்பணி பற்றிய சிந்தனை அமைந்துள்ளது.

திருஅவையின் ஆரம்பகால கட்டத்திலேயே யூத எல்லைகளைக் கடந்து மத்தியதரைக்கடல் சார்ந்த நாடுகளில் வாழ்ந்த புற இனத்தார் மத்தியில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. இதில் நற்செய்தித் தூதுப்பணியின் நிகரற்ற முன்னோடியாகத் திகழும் புனித பவுல் யூத சமய சட்டங்கள் சடங்குகள் சம்பிரதாயங்கள் போன்ற கலாசார எல்லைகளைக் கடந்து நற்செய்தி அறிவித்தார். நற்செய்தியின் கருவூலமானது ஒரு குறிப்பிட்ட பண்பாட்டுக்கோ மண்ணிற்கோ மட்டும் சொந்தமானதல்ல. இயேசுவினுடைய காலத்திலேயே மனம் மாறுங்கள் ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்து விட்டது (மத்தேயு 4:17) என பறைசாற்றத் தொடங்கிய இயேசுவின் மனநிலையில் பழையன கழிந்து புதியன புகுதல் என்னும் தூரப்பார்வையின் நோக்கு மிளிர்ந்தது.

கல்லறையைக் கடந்து உயிர்த்த ஆண்டவராக திகழும் இயேசு ஏற்கனவே மறைகளையும் பண்பாடுகளையும் ஊடுருவி மீட்பளிக்கும் கடவுளாக திகழ்கிறார். றேமன் பனிக்கார் என்னும் இறையியலாளர் மானிடத்தின் மனங்களுக்குள் மறைந்திருக்கும் இயேசுக் கிறிஸ்துவின் பிரசன்னத்தை வெளிக்கொணர்வதே நற்செய்தித் தூதுப்பணி என்கிறார்.எனவே இறையாட்சி நிறுவனமாக்கப்பட்ட கிறிஸ்தவ மறையிலும் பெரியது. திருஅவை தொடர்ந்தும் இயங்குவது மறைப்பணிக்கே.

இங்கு குறிப்படப்டவேண்டியது என்னவென்றால் கிறிஸ்துவின் நற்செய்தி அழகானது. புனிதமானது. விடுதலையளிப்பது. ஆனால் மறைத்தூது அறிவிப்பவர்களாகிய கிறிஸ்தவர்களின் மனநிலையிலும் அணுகுமுறையிலும் நடத்தையிலும் முன்னேற்றம் காண வேண்டியது என்பது அவசியமாகிறது. வரலாற்றில் மறைபரப்பாளர்களின் ஆர்வத்தையும் அர்ப்பணிப்புக்களையும் முயற்சிகளையும் எந்த வகையிலும் குறைத்துக் கூறுவதற்கில்லை.



திருத்தந்தை பிரான்சீஸ் அவர்கள் நற்செய்தியின் மகிழ்ச்சி என்னும் அப்போஸ்தலிக்க அறிவுரை ஏட்டில் கடவுள் நமக்கு வழங்கும் மீட்பு அவரின் ஓர் இரக்க செயலாகும் என்று கூறுகிறார். இவ்வாண்டின் ஒக்ரோபர் மாதத்தினை மறைபரப்பிற்கான சிறப்பு மாதமாக அனுசரிக்க அழைக்கும் திருத்தந்தை மறைபரப்புக்கான பிறர் அன்புப் பணியில் சிறப்பான முறையில் ஈடுபட வலியுறுத்துகிறார்.

இவ்வாண்டின் மறை பரப்புக்கான சிறப்பு மாதத்தின் மறைபரப்பு பணியின் உச்ச கட்டமாக இறைவனின் விசேட அன்பிற்கு உரியவர்களான சமூகங்களில் ஒடுக்கப்படும் ஏழையர் மீது பரிவு கொண்டு தனித்தும் திரு அவை சமூகங்களாகவும் இறையாட்சி அவர்கள் மத்தியில் மலர உழைப்போம்.

## இத்தாலி நாட்டவரான மறைப்பணியாளர் புனித பிரான்சீஸ் அசிசி

03 ஒக்டோபர் 1226 அன்று இறந்த இத்தாலி நாட்டவரான மறைப்பணியாளர் புனித பிரான்சீஸ் அசிசி இளைஞராக இருந்தபோது பிரான்சிசுக்கு பிரெஞ்சு மொழியில் கவிஞராக வேண்டும் என்ற ஆசை இருந்ததாகச் சிலர் கூறுகின்றனர். அசிசியில் புனித ஜோர்ஜ் பங்குக்கோவிலில் அவர் சிறிது கல்வி பயின்றார். ஆனால் அவர் படிப்பில் மிகுந்த ஆர்வம் காட்டவில்லை, தம் தந்தையின் தொழிலாகிய வாணிகத்தில் மனதார ஈடுபடவுமில்லை. இவரது வரலாற்றை எழுதியவர்கள் இவரது பகட்டான உடைகள், பணக்கார நண்பர்கள், தெருச் சண்டைகள், உலகப் போக்கை விரும்பும் இயல்பு ஆகியவை பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றனர். மேல்தட்டு இளைஞர்களோடு சுற்றித் திரிவதிலும், வீர சாகசம் புரிவதிலும் ஆர்வம் காட்டினார். நடுத்தர வர்க்கமாகிய வணிகர் பிரிவைச் சார்ந்த பிரான்சிசு உயர்குடி மக்களைப்போல ஆடம்பர வாழ்க்கை நடத்த விருப்பமுடையவராய் இருந்தார்.

பிரான்சிசு இறந்த இரண்டே ஆண்டுகளில் அவர்தம் நெருங்கிய நண்பராயிருந்த திருத்தந்தை ஒன்பதாம் கிரகோரி இவருக்குப் புனிதர் பட்டம் வழங்கினார் (யுலை 16, 1228). இன்று, புனித அசிசி பிரான்சிசு உலகெங்கிலும் போற் றப்படுகின்ற சமயத் தலைவர்களுள் சிறப்பிடம் பெறும் ஒருவராகத் திகழ்கின்றார்.

பிரான்சிசு இறந்து இரண்டு ஆண்டுகள் முடிவதற்கு முன்னரே அவருக்குப் புனிதர் பட்டம் வழங்கப்பட்டது. அப்பட்டத்தை அளித்தவர் திருத்தந்தை ஒன்பதாம் கிரகோரி ஆவார். அவர் கர்தினாலாக இருக்கும்போதே பிரான்சிசின் நெருங்கிய நண்பராக இருந்ததோடு,



பிரான்சிஸ்கு சபையின் மேற்பார்வையாளராகவும் செயல்பட்டார்.

1228, ஒக்ரோபர் 16ஆம் நாள் பிரான்சிசுக்குப் புனிதர் பட்டம் அளிக்கப்பட்டது. அதற்கு ஓராண்டுக்கு முன்னரே, பிரான்சிசுக்கு வணக்கம் செலுத்துவதற்காக ஒரு பெரிய கோவில் கட்டப்போவதாகவும், அதற்குக் கிறித்தவர்கள் நன்கொடை அளிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்து, திருத்தந்தை மடல் எழுதினார். பிரான்சிசுக்குப் புனிதர் பட்டம் அளித்த மறுநாள் அவருக்காகக் கட்டப்படவிருந்த கோவிலுக்குத் திருத்தந்தை அடிக்கல் நட்டார்.

## திருத்தந்தை பிரான்சிசு அசிசி நகருக்குத் திருப்பயணம் செல்லல்

வரலாற்றிலேயே முதன் முதலாக ஒரு திருத்தந்தை பிரான்சிசு என்னும் பெயரைத் தேர்ந்தெடுத்துள்ளார். 2013, மார்ச்சு 13ஆம் நாள் கத்தோலிக்க திருச்சபையின் 266ஆம் திருத்தந்தையாகப் பொறுப்பேற்ற அர்செந்தீனிய நாட்டவரான பெர்கோலியோ, பிரான்சிசு என்னும் பெயரைத் தம் பெயராக ஏற்று, புனித பிரான்சிசைப் போன்று எளிய வாழ்வை மேற்கொண்டு, திருச்சபையும் ஏழ்மையைத் தழுவி ஏழைகளுக்கு ஆதரவாகச் செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றார்.

திருத்தந்தை பிரான்சிசு தமது பெயர்கொண்ட புனிதரான அசிசியின் பிரான்சீஸ் பிறந்து, வளர்ந்து, பணி செய்து, இறந்த இடமாகிய அசிசி நகருக்கு, அப்புனிதரின் திருவிழாவான ஒக்ரோபர் 4ஆம் நாள் திருப்பயணமாகச் சென்றார்.

அங்கு, திருத்தந்தை தம் புனிதரின் வாழ்வோடு தொடர்புடைய அனைத்து இடங்களுக்கும் சென்று, மக்களைச் சந்தித்து உரையாடி, திருப்பலி நிகழ்த்தி, இறை வேண்டல் செய்து, மறையுரைகள் ஆற்றினார்.

புனித பிரான்சிசு தொழுநோயாளர் ஒருவரை அரவணைத்தது போன்று திருத்தந்தை பிரான்சிசும் உடல் - உள ஊனமுற்ற இளையோரை சந்தித்து, ஒருவர் ஒருவராகக் கட்டித்தழுவி, ஆசி வழங்கினார்.

கத்தோலிக்க அறநிலையம் நடத்துகின்ற ஏழையர் உணவகம் சென்று, அங்கு ஏழைகளோடு அமர்ந்து திருத்தந்தை உணவு உட்கொண்டார். பின்னர், புனித பிரான்சிசு தாம் உடுத்தியிருந்த ஆடையைக் கூட கழற்றிக் கொடுத்து விட்டு இயேசுவைப் பின்செல்ல முடிவெடுத்த இடத்தில் திருத்தந்தை உரையாற்றியபோது, புனித பிரான்சிசைப் போன்று திருச்சபையும் ஏழ்மையைக் கடைப்பிடித்து, ஏழைகளுக்கு ஆதரவாகச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.



# குர்துக்கள் மீது தாக்குதல் ஏன்?

துருக்கி, ஈராக், ஈரான், சிரியா மற்றும் ஆர்மீனியா போன்ற நாடுகளின் எல்லைப் பகுதிகளில் மலைப்பாங்கான இடங்களில் வசிப்போர் தான் குர்துக்கள். குர்து மொழி பேசும் இவர்களுக்கென்று தனி நாடு கிடையாது. இவர்கள் வாழும் நிலப்பரப்பை குர்திஸ்தான் என்று அவர்கள் அழைக்கின்றனர். இவர்கள் ஓர் இன சிறுபான்மை குழு, சுமார் இரண்டரை கோடியில் இருந்து 3 கோடி வரை இருப்பார்கள் பெரும்பாலானவர்கள் சன்னி முஸ்லிம்கள். அவர்கள் ஒரு தனித்துவமான இனம், கலாசாரம் மற்றும் மொழியால் ஒன்றுபட்டுள்ளனர்.

குர்துகள் எங்கு வாழ்கிறார்கள் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், குர்திஸ்தான் என்று அழைக்கப்படும் தாயகத்தை உரு வாக்குவதற்கு குர்துகள் பாடுபட்டு வருகிறார்கள். இப்போது உலகின் மிகப்பெரிய நாடற்ற நாடுகளில் குர்திஸ்தான் ஒன்றாகும்,

அரசு சாரா பிராந்தியமான மக்களுக்கு உத்தியோகபூர்வ தாயகமோ நாடோ இல்லை. இன்று, குர்திஸ்தான் துருக்கி, சிரியா, ஈராக், ஈரான் மற்றும் ஆர்மீனியா ஆகிய ஐந்து வெவ்வேறு நாடுகளில் உள்ள நிலப்பரப்பைக் கொண்டுள்ளது.

வை.பி.ஜி என அழைக்கப்படும் குர்தீஷ் மக்கள் பாதுகாப்புப் படை தான் குர்து மக்களை பாதுகாக்கிறது. சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒழித்துக் கட்டுவதில் இந்த அமைப்பு பெரும் பங்கு வகித்தது.'

அமெரிக்க படைகள் மற்றும் சிரிய கிளர்ச்சிப் படைகளுடன்சேர்ந்துகொண்டு ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒழித்துக் கட்டியது ஒவை.பி.ஜி., அமைப்பு. சிரியாவில் நிலைமை இப்படி இருக்க, துருக்கியில், குர்துக்களுக்கு பெரிய அளவில் மதிப்பு கிடையாது. மேலும் தனி தேசம் கேட்கும் குர்துக்கள் தங்கள் நாட்டிலும், தங்கள் நாட்டின் எல்லை அருகேயும் இருக்கின்றமையை துருக்கி விரும்பவில்லை.

## ஐ.எஸ். தீவிரவாதம் மீண்டும் தலைதூக்கும் ஆபத்தான நிலை

துருக்கியில் குர்துகள் தங்கள் அடையாளத்தைத் தக்க வைத்துக் கொள்ள போராடி வருகின்றனர், பெரும்பாலும் துருக்கியில் இவர்கள் மவுண்டன் டர்க்ஸ் என்று அழைக் கப்படுகிறார்கள், அங்கு அவர்கள் பாரம்பரிய குர்திஷ் ஆடைகளை அணியவோ அல்லது அவர்களின் மொழியைப் பேசவோ தடை செய்யப்பட்டு உள்ளனர்.

துருக்கியில் குர்துகள் மிகப்பெரிய இன சிறுபான்மையினராக இருந்தாலும், சுமார் 20 சதவீத மக்கள் உள்ளனர், அவர்கள் துருக்கியில் ஒரு சிறுபான்மைக் குழுவாக அங்கீகரிக்கப்படவில்லை.

குர்துக்களின் தனி தேசத்தை விரும்பாத துருக்கி அதிபர் தயீப் எர்டோகன் குர்துக்கள் போராளிகள் குழுவின் ஆதரவுடன் தங்கள் நாட்டிலும் சிரியாவிலும் செயல்பட்டு வரும் குர்திஸ்தான் தொழிலாளர் கட்சியை ஒழித்துக் கட்ட வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டவர்.

எல்லையோரம் உள்ள குர்து இனப் போராளிகளை தீர்த்தக் கட்ட தக்க சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த துருக்கி அதிபர் எர் டோகனுக்கு, அமெரிக்க அதிபர் டிரம்பின் அறிவிப்பு மகிழ்ச்சியை அளித்தது.

தங்கள் நாட்டு படைகளை சிரியாவில் இருந்து வாபஸ் பெறுவதாக அறிவித்த டிரம்ப், அதே வேளையில், குர்து போராளிகளுக்கு எதிராக துருக்கி போர் தொடர்ந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்தார். இருப்பினும் இதைப் பொருட்படுத்தாத துருக்கி அரசு, குர்து இனப் போராளிகளுக்கு எதிராக போரைத் தொடங்கியுள்ளது.

புதன்கிழமை இரவில் சிரியாவின் ரஸ் அல் அயின் நகரை நோக்கி, துருக்கி ராணுவம் வான் வழித்தாக்குதலைத் தொடங்கியது. டல் அப்யத் உள்பட 2 நகரங்களில் துருக்கி ராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது. அந்த நகரங்கள் முழுவதும் புகை மண்டலமாக காட்சி அளிக்கின்றன.

உயிருக்கு அஞ்சி அங்கு வசிக்கும் 2 லட் சம் மக்கள், தங்கள் இருப்பிடங்களை விட்டு கூட்டம் கூட்டமாக வெளியேறி வருகின்றனர். இதுவரை ஓவ்.பி.ஜி. போராளிகள் குழுக்களின் 181 முகாம்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாக துருக்கி கூறியுள்ளது.

குர்திஷ் சிரிய ஜனநாயகப் படைகள் (எஸ்.டி.எஃவ்) வியாழக்கிழமை, தல் ஹலாஃப் மையத்திலும், வடகிழக்கு சிரியாவின் ஸ்லுக் நகரத்திலும் துருக்கிய ஆக்கிரமிப்பு இராணுவம் மேற்கொண்ட தரை ஊடுருவல் முயற்சியைத் தடுத்து விட்டதாக கூறி உள்ளது.

ஒபரேஷன் ' அமைதி வசந்தம் ' இரவில் விமா னம் மற்றும் நிலம் மூலம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் அடையப்பட்டன. திட்டமிட்டபடி செயல்பாடு வெற்றிகரமாக அமைந்தது என கூறியது.

துருக்கியின் இராணுவ நடவடிக்கையின் முதல் நாளில் 8 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் டசின் கணக்கானவர்கள் காயமடைந்தனர் என தகவல் வெளியாகி உள்ளது

சிரியாவின் எல்லையை ஒட்டிய அக்காக் கலே என்ற இடத்தில் ராணுவ டாங்குகள் குவிக்கப்பட்டுள்ளன. குர்து போராளிகள் குழுக்களுக்கு எதிராக துருக்கி தொடங்கியுள்ள இந்தப் போரால், சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதம் மீண்டும் தலை தூக்க வாய்ப்பு இருப்பதாக உலக நாடுகள் கவலை தெரிவித்துள்ளன.

துருக்கி நடவடிக்கையை பஹ்ரைன், எகிப்து, சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் கண்டித்துள்ளன. இங்கிலாந்து, ஈராக் போன்ற பல நாடுகள் கடுமையான கவலையை வெளிப்படுத்தியுள்ளன.

நிலைமை குறித்து விவாதிக்க ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்சில் இன்று காலை தனிப்பட்ட முறையில் கூடியது. ஒபரேஷன் அமைதி வசந்தம் ' என்ற பெயரில் குர்துக்கள் மீது துருக்கி நடத்தும் தாக்குதல் பற்றி ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் கவலை தெரிவித்து உள்ளது. *

# மனதிலிருந்து சுரந்த பால்

'எதுவாக உன்னை நீ நினைக்கிறாயோ, அதுவாகவே நீ மாறுவாய்' என்னும் சித்தாந்தத்தைப் பல்வேறு மதங்களும் தத்துவக் கோட்பாடுகளும் நம்பிக்கைகளும் வலியுறுத்துகின்றன. மேரி கியூரி தனது குடும்பச் சூழல் காரணமாகத் தனது பதின்ம வயதில் ஒரு பணக்கார உறவினர் வீட்டில் பணிப்பெண்ணாக வேலைக்குச் சேர்கிறார். படிப்பறிவு இல்லாத காரணத்துக்காகத் தனது உறவினர்களால் அவமானப்படுத்தப்படும் மேரி, எப்படியாவது படித்துப் பட்டம் பெற வேண்டும் என்கிற வைராக்கியத்தோடு தனது தடைப்பட்ட கல்வியைத் தொடர்கிறார்.

கியூரியைத் திருமணம் முடித்து அவரோடு இணைந்து பல ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு வேதியியலுக்கும் இயற்பியலுக்கும் என்று இரண்டு துறைகளில் நோபல் விருதுகள் பெற்று உலகின் தலைசிறந்த விஞ்ஞானிகளில் ஒருவராக ஆனார்.

இந்த சித்தாந்தம் பொதுவில் ஆண் – பெண் இருவருக்குமே பொருந்தும். என்றாலும், பெண்கள் இன்னும் அதிகமான இடர்ப்பாடுகளைத் தாண்டி, தான் ஈடுபட்ட காரியத்தைச் செய்து முடிக்க வேண்டியிருக்கிறது. எனவே, இதற்கான வல்லமை அவர்களிடம் சிறிது அதிகமாகவே காணப்படுகிறது. எழுபது வயது மூதாட்டி ஒருவர் சிறு குழந்தைகளுக்குப் பாலூட்டியதாக எனது பாட்டி கூறியிருக்கிறார். கணவனை இழந்து தனிமையில் சிறு சிம்னி விளக்கின் வெளிச்சத்தில் தனது இரவுப் பொழுதுகளைக் கழித்துவந்த அவருக்குப் பகல் முழுவதும் துணையாக இருந்துவந்தது, தோட்ட வேலைக்



குச் செல்லும் பெண்கள் அவரிடம் விட்டுச்சென்ற சிறு குழந்தைகள்தான்.

வேலைக்குச் சென்ற தாய்மார்கள் வீடு திரும்பும் வரை இந்தக் குழந்தைகளை அந்த மூதாட்டிதான் பராமரித்துவந்திருக்கிறார். பசியால் அந்தக் குழந்தைகள் அழும் நேரங்களில் அந்த மூதாட்டியைத் தாயென நினைத்து அந்தக் குழந்தைகள் அவரிடம் பால் குடிக்கத் தொடங்கியிருக்கின்றன. முதலில், அப்படித் தாய்ப்பால் எதுவும் வராமல்போனாலும் நாளடைவில் அந்த மூதாட்டிக்கும் பால் சுரக்க ஆரம்பித்திருக்கிறது. அவரது இறுதிக் காலம் வரை அவர் பல குழந்தைகளுக்குப் பாலூட்டினார் என எனது பாட்டி கூறுவார்.

மேரி கியூரி பணிப்பெண்ணாக இருக்க வேண்டும் என்று எண்ணியபோது பணிப்பெண்ணாக இருந்தார், படித்துப் பட்டம் பெற்று ஆராய்ச்சி மேற்கொள்ள வேண்டும் என்று தீர்மானித்த போது ஆராய்ச்சியாளராக மாறியிருந்தார். முதலில், இந்த மூதாட்டியிடம் விடப்பட்ட குழந்தைகளுக்கு அவர் வெறும் காப்பாளராக இருக்க வேண்டும் என்று இயல்பாக எண்ணியிருப்பார். நாளடைவில், அந்தக் குழந்தைகளின் பசியும் வறுமையும் அந்த மூதாட்டியை அவர்களுக்கு மனதளவில் தாயாக மாற்றிவிட்டது. அவரிடம் விடப்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் பசியமர்த்த வேண்டும் என்பதே அவருக்குள் எழுந்த எண்ணமாக இருந்திருக்க வேண்டும். அவரது எண்ணத்தின் வலிமையே அவருக்குப் பால் சுரக்கக் காரணம். அவர்களுக்கு அவர் தாயாக விரும்பினார், தாயாகியும் விட்டார். *

# பாகிஸ்தானை தோற்கடித்த இளம் சிங்கங்களுக்கு பெருந்தொகைப் பணம்

சர்வதேச இருபது கிரிக்கெட் தரவரிசையில் முதல் நிலை அணியான பாகிஸ்தானை மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் முழுமையாக (3 – 0) வெற்றிகொண்டு தங்களது அற்புத ஆற்றல்களால் தேசத்துக்கு புகழும் பெருமையும் ஈட்டிக்கொடுத்த இளம் இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு மொத்தமாக 145,000 அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளதாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத் தலைவர் ஷம்மி சில்வா தெரிவித்தார்.

இதில் இருபது 20 கிரிக்கெட்டில் ஈட்டிய ஒவ்வொரு வெற்றிக்கும் தலா 15,000 அமெரிக்க டொலர்கள் ஊக்குவிப்புத் தொகை அடங்குவதாக அவர் குறிப்பிட்டார்.



இந்த வெகுமானத்தை வென்ற இருபது 20 கிரிக்கெட் வீரர்களில் பலர் இலங்கை அணியில் தமது இருப்பை உறுதிசெய்வதற்கான வாயிலைத் திறந்துகொண்டதுடன் பாதுகாப்பு காரணங்களைக் காட்டி பாகிஸ்தான் செல்ல மறுத்த பத்து வீரர்களின் எதிர்காலத்தையும் கேள்விக்குறியாக்கியுள்ளனர்.

சர்வதேச இருபது 20 கிரிக்கெட் தரவரிசையில் முதல் நிலை அணியும் பலம்வாய்ந்த அணியுமான பாகிஸ்தானை முழுமையாக வெற்றிகொண்ட தசுன் ஷானக்க தலைமையிலான அணியில் இடம்பெற்று அபரிமிதமாகப் பிரகாசித்த வீரர்களைக் கொண்டு புறம்பான இருபது 20 இலங்கை அணியை அமைக்கும் திட்டம் உள்ளதா என தெரிவுக் குழுத் தலைவர் அஷந்த டி மெல்லிடம் பிரத்தியேகமாகக் கேட்டபோது, அது குறித்து ஆழமாக சிந்தித்து வருகின்றோம் என பதிலளித்தார்.

பாகிஸ்தானிலிருந்து இலங்கை அணி நாடு திரும்பிய பின்னர் ஸ்ரீலங்கா கிரிக்கெட் தலைமையக கேட்போர்கூடத்தில் வெள்ளி இரவு நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் பின்னரே பிரத்தியேகக் கேள்வி ஒன்று அவர் பதிலளித்தார்.

பாகிஸ்தானில் துடுப்பாட்டத்திலும் பந்துவீச்சிலும் அதி சிறந்த ஆற்றல்களை வெளிப்படுத்திய ஆறு பேருடன் இன்னும் சில வீரர்கள் எம்மைப் பெரிதும் கவர்ந்துள்ளனர். அவர்களில் சிலர் சர்வதேச அரங்கில் விளையாடுவதை நான் முதல் தடவையாக பார்வையிட்டேன். இத்தகைய ஆற்றல்களும் அர்ப்பணிப்புத் தன்மை நிறைந்தவர்களும் இதற்கு முன்னர் இலங்கை அணிக்குள் ஈர்க்கப்படாதமை ஏன் என்பது எனக்கு புரியவில்லை. நான் கடந்த ஒரு வருடமாகத்தான் தெரிவுக் குழுவில் இடம்பெறுகின்றேன். சிரேஷ்ட வீரர்கள் பத்து பேர் பாகிஸ்தான் செல்ல மறுத்ததாலேயே இவர்களுக்கு வாய்ப்பு கிடைத்தது. இவர்கள் தங்களுக்கு கிடைத்த வாய்ப்பை பற்றிப்பிடித்துக்கொண்டார்கள். ஆஸ்திரேலியாவுக்கான இருபது 20 கிரிக்கெட் சுற்றுப் பயணத்துக்கு இந்த வீரர்களுடன் மூன்று சிரேஷ்ட வீரர்களை இணைக்க எண்ணியுள்ளோம். மேலும் இருபது 20 வகை கிரிக்கெட்டுக்கு என தனியான ஓர் அணியை உருவாக்குவது குறித்தும் ஆழமாகச் சிந்தித்து வருகின்றோம் என அஷந்த டி மெல் தெரிவித்தார்.

அதற்கு முன்பதாக ஊடக சந்திப்பின் போது கருத்து வெளியிட்ட அஷந்த டி மெல், சிரேஷ்ட வீரர்கள் பாகிஸ்தான் செல்ல மறுத்தபோது புதியவர்கள் பிரகாசித்தால் நீங்கள் அணியிலிருந்து நீக்கப்படுவீர்கள் என அவரகளிடம் கூறியிருந்தேன். அந்தப் புதியவர்களும் அற்புதமாக விளையாடிய தத்தமது ஆற்றல்களை வெளிப்படுத்தினர். அதன் மூலம் எம்மிடம் சிறந்த வீரர்கள் பலர் இருக்கின்றமை உணர்த்தப்பட்டதுடன் அவர்களிலிருந்து தேசிய அணியைத் தெரிவு செய்யும் நிலை இப்போது தோன்றியுள்ளது. எமது அணியில் பலம் மேலும் மேலும் அதிகரித்துள்ளது. ஐந்து மாற்றங்களுடன் கடைசி இருபது 20 கிரிக்கெட் போட்டியிலும் வெற்றிபெற்றதன் மூலம் அது நிரூபணமாகியுள்ளது. இவர்கள் தொடர்ந்து வெற்றிகள் ஈட்டுவதைப் பழக்கமாக்கிக்கொண்டால் அவுஸ்திரேலியாவில் நிச்சயமாகத் திறமையை வெளிப்படுத்துவார்கள் என்றார்.

இதற்கு முன்னர் உரிய வீரர்களைத் தெரிவு செய்வதில் சிக்கலை எதிர்கொண்டதாகவும் தற்போது அந் நிலை மாறியுள்ளது எனவும் அஷந்த டி மெல் தெரிவித்தார்.

முன்னர் உரிய வீரர்களைத் தெரிவு செய்வதில் சிக்கலை எதிர்கொண்டோம். ஆனால் இப்போது துடுப்பாட்ட வரிசையில் 6 இடங்களுக்கு போட்டித்தன்மை தோன்றியுள்ளது. இளையோருக்கு கொடுக்கப்பட்ட வாய்ப்பை அவர்கள் பற்றிப் பிடித்துக் கொண்டு பிரகாசித்ததன் மூலம் அவர்கள் பால் நான் ஈர்க்கப்பட்டேன். பானுக்க ராஜபக்ஷ, மினோத் பானுக்க, ஓஷாத பெர்னாண்டோ ஆகியோர் உடலாலும் உள்ளத்தாலும் அர்ப்பணிப்புடன் விளையாடினார். மற்ற வர்களும் அப்படித்தான். இவர்கள் எல்லோரும் உள்ளூரில் விளையாடுவதைப் பார்த்துள்ளோம். ஆனால், சர்வதேச இருபது 20 அரங்கில் முதல் நிலை அணிக்கு எதிராக அதுவும் அதிவேகப் பந்துவீச்சாளர்களைக் கொண்ட அணிக்கு எதிராக அவர்கள் ஆற்றல்களை வெளிப்படுத்திய விதம் பெரும் பாராட்டுக்குரியது. மேலும் 30, 40 பந்துகளில் ஓட்டங்களைப் பெறமுடியாமல் (டொட் போல்ஸ்) போனாலும் சிக்சர்கள், பவுண்ட்றிகளை விளாசி அவர்கள் அதனை நிவர்த்தி செய்துகொள்கின்றனர். அதுதான் இருபது 20 கிரிக்கெட்டுக்கு அவசியமானதாகும். அத்துடன் பானுக்க ராஜபக்ஷ துடுப்பெடுத்தாடிய விதம் மஹேல ஜயவர்தனவின் துடுப்பாட்டத்தை நினைவுக்குக் கொண்டு வந்தது.

இந்த சுற்றுப் பயணத்தில் அதிகளவில் முன்னேற்றதை வெளிப்படுத்தியவர் சுழல்பந்துவீச்சாளர் வனிந்து ஹசரங்க ஆவார். துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு ஆகிய மூன்று துறைகளிலும் மன உறுதியுடன் விளையாடியமை அவரது மகத்தான ஆற்றலை வெளிக்காட்டியது. எனவே ஆஸ்திரேலிய கிரிக்கெட் விஜயத்துக்கான குழாத்தை தெரிவு செய்யும் போது இந்த வீரர்களின் ஆற்றல்களை கவனத்தில் கொள்வோம் என்றார் அஷந்த டி மெல்.

# இளம் வீரரிடம் தோல்வி கண்டார் ரோஜர் பெடரர்



ஆண்களுக்கே உரித்தான ஷங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவு காலிறுதிப் போட்டியொன்றில், இளம் வீரர் அலெக்ஸாண்டர் ஸ்வெரவ்விடம் தோல்வியடைந்து, ஜாம்பவான் ரோஜர் பெடரர் தொடரிலிருந்து வெளியேறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற காலிறுதிப் போட்டியில், உலகின் 6 ஆம் நிலை வீரரான ஜேர்மனியின் இளம் வீரரான அலெக்ஸாண்டர் ஸ்வெரவ், உலகின் மூன்றாம் நிலை வீரரான ரோஜர் பெடரருடன் பலப்பரீட்சை நடத்தினர்.

இரசிகர்களுக்கு உச்ச விறுவிறுப்பை பரிசளித்த இப்போட்டியின் முதல் செட்டில், ஆதிக்கம் செலுத்திய அலெக்ஸாண்டர் ஸ்வெரவ், 6 - 3 என செற்றைக் கைப்பற்றினார்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செற்றில், ஆக்ரோஷமாக சீறி எழுந்த ரோஜர் பெடரர், அலெக்ஸாண்டர் ஸ்வெரவ்வுக்கு கடும் நெருக்கடி கொடுத்தார்.

இதனால் செற் பிரேக் வரை நகர்ந்தது. இதில் கடுமையாக போராடி 7 - 6 என பெடரர், செற்றைக் கைப்பற்றினார்.

இருவரும் தலா 1 செற்றைக் கைப்பற்றியதால், வெற்றியை தீர்மானிக்கும் மூன்றாவது செற் பரபரப்படைந்தது.

இதில், மீண்டும் தனது அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய அலெக்ஸாண்டர் ஸ்வெரவ், 6 - 3 என செற்றைக் கைப்பற்றி அரையிறுதிக்கு முன்னேறினார்.

இன்று நடைபெறும் அரையிறுதியில் அலெக்ஸாண்டர் ஸ்வெரவ், இத்தாலியின் மேட்டியோ பெரெட்டினியை எதிர்கொள்ளவுள்ளார்.

# இந்திய வேகப்பந்து வீச்சு தான் உலகிலேயே மிகச் சிறப்பானது



உலகிலேயே இந்திய வேகப்பந்து வீச்சு தான் சிறப்பானது என இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் கபில் தேவ் தெரிவித்துள்ளார்.

தனியார் நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே, அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், ‘கடந்த 5 ஆண்டுகளாக இந்திய கிரிக்கெட்டின் முகத்தை இந்திய வேகப்பந்து வீச்சாளர்கள் மாற்றி இருக்கிறார்கள்.

இந்திய அணியில் இதுபோன்ற வேகப்பந்து தாக்குதல் இதற்கு முன்பு பார்த்ததில்லை. இப்படி வேகப்பந்து தாக்குதல் சிறப்பாக இருக்கும் என்றும் நினைத்ததில்லை.

தற்போது உலகிலேயே இந்திய வேகப்பந்து வீச்சு தான் சிறப்பாக இருக்கிறது. மற்ற அணிகளை விட திறமை அதிகம் உள்ளது. முகமது ஷமி, தரவரிசை பட்டியலில் முதல் 10 இடங்களுக்குள் இல்லாமல் இருப்பது பெரிய விடயமல்ல. அவர் அணியில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகிறார் என்பது தான் மிகவும் முக்கியமானது.

அவர் சிறப்பாக பந்துவீசுவதை பார்ப்பதற்கு அற்புதமாக இருக்கிறது. திறமை வாய்ந்த இந்திய வேகப்பந்து வீச்சாளர்களை எண்ணி பெருமை அடைகிறேன். இன்னும் நிறைய பேர் வருவார்கள். பல இளம் வேகப்பந்து வீச்சாளர்கள் தங்களது திறமையை நிரூபிக்க ஐ.பி.எல். நல்ல களமாக இருக்கிறது.

வேகப்பந்து வீச்சை பலப்படுத்த நிறைய காலம் பிடிக்கும். ஆனால் தற்போது நிறைய போட்டிகளில் வீரர்கள் விளையாடுகின்றமையைப் பார்ப்பது நல்ல உணர்வை அளிக்கிறது. இதற்கு காரணம் ஐ.பி.எல். தொடர் தான். இதில் நிறைய வேகப்பந்து வீச்சாளர்கள் வாய்ப்பு பெற்று வருகிறார்கள்’ என கூறினார்.

1983ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ண தொடரில், இந்தியக் கிரிக்கெட் அணி, கபில் தேவ் தலைமையிலேயே முதல் உலகக்கிண்ணத்தை வென்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# 'ஈரான் ஸ்டேடியத்தில் இனி பெண்களுக்கு அனுமதி..!'– மரணத்தால் அரசைப் பணிய வைத்த 'ப்ளூ கேர்ள்'



தனது மரணத்தின் மூலம் தன் நாட்டுப் பெண்களுக்கு சுதந்திர கதவை திறந்துவிட்டுள்ளார் ஈரானின் 'ப்ளூ கேர்ள்' என அழைக்கப் படும் ஸஹர் கோடயாரி.

பொதுவாக இஸ்லாமிய நாடுகளில் பெண்களுக்கு அதிக கட்டுப்பாடுகள் உள்ளன. இதில் ஈரான் ஒன்றும் விதிவிலக்கல்ல. மற்ற நாடுகளில் இல்லாத வகையில் சில எழுதப்படாத சட்டங்கள் அங்கு பின்பற்றப்பட்டு வருகின்றன. அதில் முக்கியமானது ஈரான் பெண்கள் கால்பந்தாட்ட மைதானத்துக்கு வந்து விளையாட்டைப் பார்க்கத் தடை. எழுதப்படாதச் சட்டமாக கடந்த 1981 ஆ ம் ஆண்டு முதல் அமுலில் இருக்கும் இந்தத் தடையை மிகத் தீவிரமாக அந்நாட்டு அதிகாரிகள் நடைமுறைப் படுத்தி வந்தனர்.

இதில் விதிவிலக்காக இல்லை.. இல்லை.. அதிர்ஷ்டவசமாக கடந்த ஆண்டு தெஹ்ரானில் உள்ள மைதானத்தில், உலகக் கோப்பை கால்பந்துப் போட்டி ஒளிபரப்பு செய்யப்பட்டபோது சில பெண்கள் மட்டும் அங்கு அனுமதிக்கப்பட்டனர்.

கடுமையான தடை இருந்தாலும் ஈரான் அணிக்கு எனத் தீவிர ரசிகர்களாக நிறைய பெண்கள் உள்ளனர். இவர்களில் ஒருவர்தான் 29 வயதான ஸஹர் கோடயாரி. தீவிர கால்பந்தாட்ட ரசிகையான ஸஹர் கடந்த மார்ச் மாதம் கால்பந்து விளையாட்டைப் பார்ப்பதற்கு ஆண் போல வேடமணிந்து மைதானத்துக்குள் நுழைய முயன்றார். இவர் மட்டும் இப்படி ஆண் வேடமணியவில்லை.

சமீபகாலமாக ஈரான் பெண்கள் இப்படி ஆண் வேடமிட்டு தங்களின் விருப்பமான அணி விளையாடும் போட்டிகளைக் காண்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இவர்களைத் 'தாடி வைத்த பெண்கள்' மற்றும் 'அசாதி பெண்கள்' என்று அந்நாட்டு மக்கள் அழைக்கின்றனர். அப்படி ஒரு அசாதி பெண்ணாக ஸஹரும் மைதானத்துக்குள் நுழைய முயன்றுள்ளார். ஆனால், அவரை தடுத்து நிறுத்திய காவலர்கள் கைதுசெய்து சிறையில் அடைத்தனர்.




கூடவே 'புர்கா அணியவில்லை, விதிகளை மீறிவிட்டார்' என ஸஹர் மீது வழக்குகளையும் தொடுத்தனர். பின்பு மூன்று நாள்கள் சிறை வாசத்துக்குப் பின் பிணையில் வெளியே வந்த ஸஹர் மீது காவலர்கள் தொடுத்த வழக்கு நடைபெற்று வந்தது. ஆறு மாத காலமாக நடந்துவந்த வழக்கின் விசாரணை செப்ரெம்பரில் மீண்டும் நடந்துள்ளது. அப்போது நீதிபதி வர தாமதம் ஆன நேரத்தில் அங்குள்ளவர்கள், 'இந்த வழக்கில் நிச்சயம் ஒரு வருடம்வரை சிறைத் தண்டனை கிடைக்கும்' என்று பேசிக் கொள்ள, அதை ஸஹர் கேட்டதாகக் கூறப்படுகிறது.

இது, பயத்தை ஏற்படுத்த நீதிமன்ற வாசலிலேயே தீக்குளித்தார் ஸஹர். பலத்த காயங்களுடன் மீட்கப்பட்ட அவர் உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ஆனால், சிகிச்சை கைகொடுக்கவில்லை. 9 நாள்கள் கழித்து சரியாக, தற்கொலை எதிர்ப்பு தினம் உலகம் முழுவதும் கொண்டாடப்பட்ட அன்றே உயிரிழந்தார். இவரின் இழப்பு உலகை உலுக்கியது.

ஈரான் நாட்டுக்கு எதிராக போர்க்கொடி தூக்கப்பட்டது. லட்சக்கணக்கான ஈரானிய மக்கள் வீதிகளில் இறங்கி அரசுக்கு எதிராகப் போராடினர். விளையாட்டு மைதானத்தில் பெண்களை அனுமதிக்க வேண்டும் என பதாகைகளுடன் போராட்டம் நடத்தினர். கூடவே, ஸஹர் விரும்பிய கால்பந்து அணியின் நிறம் நீலம் என்பதால், இரானின் 'ப்ளூ கேர்ள்' என்ற பட்டத்துடன் அவரின் புகைப்படத்தை வைத்துக்கொண்டு வீதிகள்தோறும் பேரணி நடத்தினர்.



"ஈரானை உலக அளவிலான விளையாட்டுப் போட்டிகளிலிருந்து விலக்கிவையுங்கள் என வெளிப்படையாக கோரிக்கை வைத்தனர் சொந்த நாட்டு மக்கள். அவர்களுக்கு பிஃபா அமைப்பும், உலகக் கால்பந்து அமைப்புகளும் கைகொடுத்தன. 'மைதானங்களில் பெண்களை அனுமதிக்காவிட்டால் ஈரான் அணி நீக்கப்படும்' எனப் பகிரங்கமாக பிஃபா எச்சரிக்கை விடுத்தது.

## பருப்புச்சட்டி ...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

*அங்க குளிர் நாட்டில வீட்டுக்குள்ள அடைச்சு வைச்சிருந்த சின்னனும் இஞ்ச வந்தோண்ண புழுகத்தில வீட்டில நிக்காம வளவு முழுக்க ஓடித்திரியுது. எந்த நேரமும் கையில வச்சு அமத்திக் கொண்டு இருக்கிறதையும் இப்ப கண்ணிலையும் காணேல்ல. அரிசிக்க கல்லுப்பிறக்கிற மாதிரி ரெலிபோன கையில வச்சுத் தட்டி தட்டிக் கொண்டு; பத்தாக்குறைக்கு காதிலயும் ஒண்டைக் கொழுவிக் கொண்டுதான் அந்த நாட்டில பொடியளெல்லாம் நடமாடித் திரியுங்கள். தாய் தகப்பனோட இருந்து கொஞ்ச நேரம் வீட்டில ஆறுதலாய் கதைக்குதுகள் இல்லயே இப்ப இங்கையும் தான்; எல்லாம் மாறிப் போயிற்று எண்டாலும் அந்தளவுக்கு இன்னும் மாறேல்ல எண்டுதான் நினைக்கிறன் போகப்போகத் தான் தெரியும்.*

*தெற்குப்பக்கத்தில நிண்ட தென்னம் பிள்ளைக்கண்டுகளெல்லாம் நல்லா பெரிசா உயர்ந்துவளர்ந்திட்டுதுகள் நான் போகேக்க கையால எட்டி இளநீர் புடுங்கக்கூடியது மாதிரி இருந்தது இப்ப அண்ணார்ந்து பாக்க வேண்டியிருக்கு வளவையும் வீட்டையும் சுத்திப் பாக்கிறதக்கே மூண்டு நாள் தேவை இனி உற்றம் சுற்றம் எண்டு போய்வர அதோட நம்மட சனங்களும் கேள்விப்பட்டு வந்து போக மூண்டு கிழமை என்னத்தக் காணும்.*

*மூண்டு கிழமை எப்பிடிப்போன தெண்டே தெரியேல்ல எனக்கு திரும்பிப் போக வேண்டும் எண்ட கட்டாயம் இல்ல சின்னனுகள், படிக்கிறதுகள் வேலை செய்யிறவை கட்டாயம் திரும்பிப் போய்த் தானே ஆகவேணும். நமக்கென்ன எங்கையிருந்தாலும் ஒண்டுதான் இந்த மண்ணில சாகிற துக்கு குடுத்து எல்லோ வைத்திருக்க வேணும்.*

*என்ன அம்மம்மா கடுமையான யோசனையாய் இருக்கிறிங்க, ஊருக்க வந்ததும் பழைய நினைவுகள் வந்திட்டுப்போல கிடக்கு. இரண்டு வயதில போனதில எனக் கொண்டும் ஞாபகம் இல்லா மக்கிடக்கு பேரனின் குரல் கேட்டு திரும்பிப் பார்க்கிறேன். ஓம் தம்பி நீ ஊரவிட்டு நாங்க பயணம் வெளிக்கிடேக்க ஒரு சின்னத் தவ்வல், உன்ர பிறந்த இராசிதான் எல்லாரையும் நாட்டைவிட்டு அப்புறப் படுத்திட்டுது. உங்களுக்கு அந்த நாட்டில படிப்பு நல்ல வேலையள் எண்டு நல்லாய்த்தானே இருக்கிறீங்க.*

*தம்பி நான் இங்க நிக்கட்டுமாடா நான் அங்க வந்து என்ன செய்யிறது. இருக்கிற இன்னும் கொஞ்ச காலத்துக்கு நம்மட ஊருல நம்மட சனத்தோட இருந்திட்டுப்போறன் எனக்குத் தெரியும் உன்ர கொம்மா கொதிச்செழுவாள் எண்டு அது தெரிஞ்சுதான் என்ர கடவுச்சீட்டையும் கல்லோட சேர்த்துக்கட்டி பக்கத்து வளவு பாண்கிணத்துக்க நேற்றே போட்டிட்டன் சும்மா உன்னட்ட கதைவிட்டுப்பார்த்தனான். நீங்க நாளைக்கு பயணம் தலைகீழா நிண்டாலும் நான் வரேலாது. தம்பி என்னைப்பற்றி ஒருத்தரும் யோசிக்கத் தேவையில்ல. அப்புவின்ர பென்சன இஞ்ச பழைய படி மாத்திவிட்டிட்டா எனக்கு அது சோறுபோடும் ஆரும் எனக்கு காசு அனுப்ப வேணும் எண்டில்ல சுகமா நீங்க போயிட்டு வாருங்கோ.*

*தம்பி மறந்திடாமல் அந்தப் பருப்புச் சட்டியை எடுத்தக்கொண்டு போ எத்தின வருசமானாலும் அந்த வாசனை இன்னும் சட்டியில இருக்கு அதுதான் ஊர் வாசனை மண் வாசனை அது இந்த மண்ணில தான் இருக்கும் கிணத்துத் தண்ணி, வீட்டுத் தென்னமரத் தேங்காய்ப்பால், வளவு மரத்துக் கறிவேப்பில எண்டு எல்லாம் சேர்ந்த சுவை அது எண்டைக்கும் மாறாது மாற்றவும் முடியாது எங்கட கலாசாரம் பண்பாடுகள் மாதிரி பொத்திப் பொத்திப் பாதுகாக்க வேணும் அந்த சட்டியை உடைச்சுப் போடாம கொண்டுபோய் அம்மாவிட்டக் குடு இந்த அம்மம்மாவை நினைச்சு அந்த சட்டியில காய்ச்ச பருப்பு நல்லா வரும் அதோட என்ர ஞாபகமும் வரும்.*

*(யாவும் கற்பனை)*

# ஐ.தே.க. ஆட்சியைக் கைப்பற்றும் என்பது மேற்கில் சூரியன் உதிப்பதற்கு ஒப்பானது!

## கேகாலையில் மஹிந்த ராஜபக்ஷ கருத்து

கொழும்பு, ஒக். 13

ஐக்கிய தேசியக் கட்சி நாட்டின் அடுத்த ஆட்சியைக் கைப்பற்றும் என்பது, மேற்கில் சூரியன் உதிப்பதற்கு ஒப்பான ஒரு கருத்தாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கேகாலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில் –

எல்பிட்டிய தேர்தல் முடிவுகளைக் கேட்டவுடன் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

நாம் எதிர்ப்பார்த்தது போல 100 வீத வெற்றியைநாம்பெற்றுக்கொண்டுள்ளோம். இதற்காக நாம் எல்பிட்டிய மக்களுக்கு இவ்வேளையில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எதிர்வரும் 16 ஆம் திகதியன்றும் இதே பெறுபேறுதான் எமக்குக் கிடைக்கும் என்பது உறுதியாகிவிட்டது. எதிரணி மேடைகளில் எல்லாம், இன்று சேறு பூசுவதைத்தான் தேர்தல் பிரசாரமாகக் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியினர் எல்பிட்டிய தேர்தலில் வெற்றிப் பெறுவது உறுதி என்று கூறினார்கள். அப்படி வெற்றி கிடைக்காவிட்டால், அது மேற்கில் சூரியன் உதிப்பதற்குச் சமமாகும்எனவும்அவர்கள்தெரிவித்தார்கள்.

இப்போது என்ன நடந்துள்ளது? நாமும் ஒன்றைக் கூறிக்கொள்கிறோம். நாட்டில் அடுத்ததாக ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி என்பதும் மேற்கில் சூரியன் உதிப்பதற்குச் சமமாகும்.

அது ஒருபோதும் நடக்காது. இந்த நாட்டை நாம் மீட்கவேண்டும். பாதுகாக்க வேண்டும். இவ்வாறு செய்யக்கூடிய ஒருவரைத்தான் நாம் வேட்பாளராக தற்போது களமிறக்கியுள்ளோம் – என்றார். (ஐ)

# தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ஆதரவு கோட்டாவுக்கு!

மட்டக்களப்பு, ஒக். 13

கிழக்கு மாகாணத்தில் மக்கள் நலன் சார்ந்து தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரிப்பது எனத் தீர்மானித்துள்ளதாகக் கட்சியின் செயலாளர் பூ.பிரசாந்தன் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் இருப்பு, நிலம், நிர்வாகம் பொருளாதாரம் என்று தமிழர்கள் ஒடுக்கப்பட்டுவரும்நிலையில்கிழக்கு மாகாணத்தைக் கட்டிக்காக்கவேண்டிய, மீட்க வேண்டிய பொறுப்பு மிக்க அரசியல் கட்சியாக தாம் இந்த முடிவை எடுத்ததாக அவர் கூறினார்.

மட்டக்களப்பு வாவிக்கரை வீதியிலுள்ள கட்சி காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக மாநாட்டிலேயே அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

கட்சியின் தலைவர், பணிக்குழு, செயற்குழு மற்றும் பொதுச் சபை கூட்டத்தின் அடிப்படையில் கட்சியின் தொண்டர்களால், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த தலைமையிலான வேட்பாளர் கோட்டாபயவை ஆதரிப்பது என்ற தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மக்களின் வலுவாக்கம், அபிவிருத்தி, கல்வி, கலை, கலாசார மற்றும் பொருளாதார ரீதியாக தயாரிக்கப்பட்டுள்ளவற்றை தேர்தல் விஞ்ஞாபனத்தில் இணைத்துக் கொள்வதற்குத் தேவையான உடன்படிக்கை உருவாக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளர் வெளிநாட்டுக்குச் சென்ற காரணத்தினால் உடன்படிக்கை செய்ய முடியாமல் உள்ளது. இருந்தாலும் அவர்களுடன் பேசிய அடிப்படையில் அவர்கள் ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளனர்.

2008 முதல் 2012 வரை இதே மஹிந்த தலைமையிலான அரசாங்கத்தோடு இணக்கப்பாடு செய்திருந்தோம். தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் மாகாண சபை ஆட்சியை தமிழர் விடுதலைப் புலிகள் கட்சி செய்து காட்டி இருந்தது.

எங்கல் நோக்கம் கிழக்கு மாகாணத்தின் ஒவ்வொரு தமிழனும் தலைநிமிர்ந்து வாழ்வதேயாகும். தமிழர்களே கிழக்கு மாகாணத்தை ஆளக்கூடிய சூழல் உருவாக வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழர்களை பாதுகாக்கவேண்டுமாக இருந்தால்மக்களின் அனைத்து அரசியல் கட்சிகளும் கிழக்கு மக்களின் அனைத்து அமைப்புகளும் கிழக்கு மாகாணத்தில் மக்களின் அனைத்து புத்திஜீவிகளும் சேர்ந்து ஒன்றாகப் பயணிப்போம் – என்றார்.




# நீதித்துறையின் சுதந்திரத்தில் தலையிடுகின்றார் கோட்டாபய

## அஸாத் ஸாலி குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 13

தான்ஜனாதிபதியாகத்தெரிவு செய்யப்பட்டால் சிறையில் உள்ள இராணுவத்தினரை விடுவிப்பேன் என கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்திருப்பதானது, நீதித்துறையின் சுதந்திரத்தில் தலையிடும் விடயமென மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அஸாத்ஸாலிதெரிவித்துள்ளார்.

கோட்டாவின் இந்தக் கூற்றே, அவர்ஜனாதிபதியானால்என்ன நடக்கும் என்ற அபாயத்தை வெளிக்காட்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த 2015 ஓகஸ்ட் மாதம் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. இதன்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமைத்துவப் பதவியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுத்து மஹிந்தவுக்குக்கொடுத்தார்.

அதனைத் தொடர்ந்து மஹிந்த கட்சிக்குள் வந்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்களைத்தோற்கடிக்க வேண்டுமென்ற தகவலை வழங்கினார்.

இதன்போது, மஹிந்தவின் கீழ் செயற்பட்ட அனைவரும் வெற்றியடைந்தார்கள். ஆனால் தோல்வியடைந்ததிஸாநாயக்க, டிலான் பெரேரா ஆகியோருக்குத் தேசியப் பட்டியலின் ஊடாகவே வாய்ப்பை வழங்கினார்.

அண்மையில் துமிந்த திஸாநாயக்கவின் வீட்டுக்குச் சென்ற கோட்டா, தனது தேர்தல் பிரசார மேடைக்கு அவரை அழைத்துச் சென்றார். கடந்த 2015 ஆம் ஆண்டும் இதே செயற்பாடுகளே அரங்கேறி இருந்தன.

சுதந்திரக்கட்சி அமைப்பாளர், பொதுஜன பெரமுனவுடன் இணைந்துள்ளதாகக் கூறி உரையாற்றியபோது, மக்கள் கூச்சலிட்டனர்.

துமிந்த திஸாநாயக்க, இந்த அரசை மஹிந்தவுக்கு மைத்திரிபால மைத்திரியின் கோரிக்கைக்கு அமைவாக பொதுஜன பெரமுனவுடன இணைந்துள்ள அனைவரும் வீட்டுக்கு அனுப்பப்படுவது உறுதி.



நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் காரணமானவர்களும் கோட்டாவுடன் இணைந்துள்ளார்கள்.

கோட்டாவும் மஹிந்தவுமே நாட்டின் வளங்களை விற்றவர்கள். அதுமாத்திரமின்றி அபிவிருத்தி என்ற பெயரில் கோடிக்கணக்கான பணங்களைக் கொள்ளையடித்தவர்கள்

ஆகையால் மக்கள், சிந்தித்து உரியவருக்கு தங்களது ஆதரவை வழங்க வேண்டும் – என்றார். (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.10.2019 இல் வெளியிடப்பெற்றது.